Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 011 | திங்கட்கிழமை | கார்த்திகை 22ஆம் நாள் 07 டிசெம்பர் 2020 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 16 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## 649 பேருக்கு 'கொரோனா'

கொழும்பு, டிசெ.7
இலங்கையில் நேற்றும் 649 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 877 ஆக அதிகரித்துள்ளது. 15 ▶

## கிளிநொச்சி இளைஞருக்கு தொற்று


கிளிநொச்சி, டிசெ.7
கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. எரிபொருள் விற்பனை நிலையத்தில் 15 ▶

## பருத்தித்துறையில் இறந்தவருக்கு தொற்று இல்லை!

யாழ்ப்பாணம், டிசெ.7
பருத்தித்துறையில் ஒருவர் கொரோனாத் தொற்றால் இறந்தார் என்ற தகவல் வதந்தி என்று தெரிவிக்கப்பட்டது.
பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர் பருத்தித்துறை ஆதார 15 ▶

## போகம்பரை கைதிகள் கொடிகாமம் முகாமில்!

யாழ்ப்பாணம், டிசெ.7
கண்டி - போகம்பரை சிறைச்சாலைக் கைதிகள் 5 பேருந்துகளில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு கொடிகாமம் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 15 ▶




நேற்று பிற்பகல் முதல் கொட்டித் தீர்த்த மழையால் யாழ். நகரப் பகுதி வெள்ளக்காடானது. படம்: குமணன்

## யாழில் 110.3 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், டிசெ.7
யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் 110.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. நேற்றுப் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரையான 6 மணித்தியாலங்களில் இந்த மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
அதேநேரம், நேற்றுப் பிற்பகல் 2.30 மணி தொடக் 15 ▶

### முச்சந்தி முரளி



'யாழ்ப்பாணத்தில நல்லஆக்கள் கூடிட்டினம் போல. அதுதான் மழை இந்தக் கொட்டு கொட்டுதுபாருங்கோ'

# கொட்டுகின்றது மழை
# தத்தளிக்கிறது வடக்கு

- இன்னும் மூன்று நாள்களுக்கு நீடிக்கும்
- யாழ்ப்பாணம் நிலைமை கவலை
- யாழ். - கிளிநொச்சிக்கு சிவப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 7
வடக்கு மாகாணத்தில் கடந்த சில நாள்களாக கடும் மழை வீழ்ச்சி கிடைத்துவரும் நிலையில், யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. வடக்கில் பல கிராமங்கள் வெள்ளத்துக்குள் தத்தளிக்கின்றன. புரேவி புயல் வடக்கை ஊடறுத்துச் சென்றுள்ளபோதும், இன்னும் 3 நாள்களுக்கு கன மழை தொடரும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. 15 ▶

## யாழ்ப்பாணம், கிளிநொச்சி பாடசாலைகளுக்கு 'லீவு'

யாழ்ப்பாணம், டிசெ.7
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பாடசாலைகளுக்கு இன்று திங்கட்கிழமையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறிவித்துள்ளார். 16 ▶

## கொரோனா காவு 140

கொழும்பு, டிசெ.7
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் மூவர் உயிரிழ 15 ▶

## வெள்ள இடருக்கு மக்களே காரணம்!

*ஒரே போடு போட்டார் யாழ்.மாவட்டச் செயலர்*

யாழ்ப்பாணம், டிசெ.7
மழை நீர் வடிந்து ஓடாதமை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. உள்ளூராட்சி சபை 15 ▶

## வெள்ளம் அடித்துச் சென்ற மாணவன் சடலமாக மீட்பு!



வவுனியா, டிசெ.7
வவுனியா புதுக்குளத்தில், வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட மாணவன் இரு தினங்களின் பின்னர் நேற்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளான். 15 ▶

## முன்னுள்ள வழி 'லொக்டவுண்'

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு**

கொழும்பு, டிசெ.7
அட்டுலுகமவைப் போன்று கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ள பகுதிகளிலும், மக்க 15 ▶

## திட்டமிடல் இன்மையே வெள்ளத்துக்குக் காரணம்

*சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், டிசெ.7
யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கி நிற்பதற்குச் சரியான திட்டமிட்டல் 15 ▶

## குறைபாடுகளை நீக்கக்கோரி நாளை பணிப் புறக்கணிப்பு!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தெல்லிப்பழை கிளை அறிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.7
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்துத் தரக் 16 ▶

உதயன் newuthayan.com

# சட்டவிரோத மதுநிலையம் நவக்கிரியில் முற்றுகை!

யாழ்ப்பாணம், டிசெ. 7



**யாழ். புத்தூர் நவக்கிரி பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு முற்றுகையிடப்பட்டது.**

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது குறித்த பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது என பாதுகாப்பு தரப்பினருக்கு கிடைத்த ரகசியதகவலையடுத்து அச்சுவேலி பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. விரைந்து செயற்பட்ட பாதுகாப்புத் தரப்பினரும் பொலிசாரும் இணைந்து குறித்த இடத்தை முற்றுகையிட்டு கசிப்புக் காச்சினார் என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம20)

## ஆயிரம் ரூபா விவகாரம்; ஜே வி பி நேற்று போராட்டம்

ஹற்றன், டிசெ.7

பெருந்தோட்டத் தொழிலாளர்களை ஆயிரம் ரூபா சம்பள விடயத்தில் அரசாங்கம் ஏமாற்ற வேண்டாம் எனக் கோரி ஜே.வி.பியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று ஹற்றன் நகரில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, ஏமாற்ற வேண்டாம், வரவு - செலவு திட்டத்தில் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பளத்தை உள்வாங்கு போன்ற பல்வேறு வசனங்கள் எழுதிய சுலோகங்களுடன் பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடைவெளிகளை ஏற்படுத்தி 15 உறுப்பினர்களுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)





# ரஞ்சன் எம். பிக்கு மீண்டும் சிறையா?

### 8இல் வருகின்றது தீர்ப்பு

கொழும்பு, டிசெ. 7

என்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கொன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதால் எதிர்வரும் 8 ஆம் திகதி நான் சிறைக்கு செல்லவுள்ளேன். எனவே இன்றே எனது நாடாளுமன்ற இறுதி நாள் என நினைக்கின்றேன். எப்படியும் என்னை இரண்டு ஆண்டுகளுக்கு சிறையில் அடைப்பார்கள் என்று நாடாளுமன்றில் தெரிவித்தார், எதிர்க்கட்சி உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நடைபெற்றது.

அதில் உரையாற்ற ஆரம்பித்த ரஞ்சன் ராமநாயக, நீதிமன்ற விசாரணைகள் குறித்தும் ஷானி அபேசேகரவின் வழக்குகள் குறித்தும் பேசினார். இந்த அரசு குற்றவாளிகளை காப்பாற்றவும், குற்றவாளிகளுக்கு எதிரானவர்களை தண்டிக்கவும் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. நீதியை நிலைநாட்டுவோம் என வந்த ராஜபக்ச அரசு இன்று குற்றவாளிகள் அனைவரையும் விடுவித்து வருகின்றது என்றார்.

இதன்போது ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக ஆளும் கட்சி உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.

அவரது உரையை குழப்ப ஆரம்பித்தனர்.

எனினும், கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பேசிக்கொண்டிருந்த ரஞ்சன், சிறையில் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயகவின் வழக்குகள், பிள்ளையான் விடுவிக்கப்பட்டதன் பின்னணி போன்ற காரணிகளைக் கூறினார். இதன்போது கடுமையான எதிர்ப்பு ஆளும் தரப்பில் இருந்து எழுந்தது.

இந்தநிலையில் கூறிய ரஞ்சன், "சபாநாயகரே! எதிர்வரும் 8 ஆம் திகதி சிறைக்கு செல்லவுள்ளேன், எனக்கு நாடாளுமன்ற இறுதிநாள் இன்று என்றே நினைக்கின்றேன். எனக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச வழக்கு ஒன்றைத் தொடுத்துள்ளார். எனவே இந்த வழக்கில் என்னை நிச்சயமாக சிறையில் அடைப்பார்கள். குறைந்தபட்சம் ஆறு மாதங்கள், கூடியது இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைப்பார்கள். எனவே என்னை உரையாற்ற இடமளியுங்கள் என்றார். (து-இ)

## வலி.தென்மேற்கில் தமிழரசுக்கு 250 பேர்

யாழ்ப்பாணம், டிசெ.7

வலி. தென்மேற்கிலிருந்து தமிழரசு கட்சிக்கு 250 பேர் நிரந்தர உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கையை நவாலி தொகுதிதமிழரசுக்கட்சி மூலக்கிளை தலைவர் மேற்கொண்டுள்ளார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வலி தென்மெற்கு நவாலியில் தேர்தல் பணியில் ஈடுபட்டோர் தம்மை கட்சியின் நிரந்தர உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து வந்தனர். அதற்கு அமையவே கட்சி நலன் சார்ந்து செயற்படக்கூடிய 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள், பொதுமக்கள் இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (வ50)

## மட்டு. ஊடகவியலாளர் விளக்க மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.7

மட்டக்களப்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சுயாதீன ஊடகவியலாளர் முருகுப்பிள்ளை கோகிலதாசன் (வயது 37) 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வாழைச்சேனை கிண்ணையடியைச் சேர்ந்த இந்த ஊடகவியலாளர் கடந்த 29ஆம் திகதி பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பான பதிவை தனது 'பேஸ்புக்'கில் பதிவேற்றியிருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அதேவேளை, இவரது கைதுக்கு எதிராக ஊடக அமைப்புக்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தன. (எ22)

## துணுக்காயில் 75 பேருக்கு உலர் உணவுப் பொதிகள்



துணுக்காய், டிசெ.7

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

75 பேருக்கான தலா 1500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த உணவுப் பொதிகள் துணுக்காய் உதவிப் பிரதேச செயலாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டன. (ற-6)

## ஏர் நிலம் அமைப்பால் வாழ்வாதார உதவி



கிளிநொச்சி, டிசெ.7

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கச்சார்வெளி பகுதியில் வாழும் குடும்பம் ஒன்றுக்கு விவசாயத் தொழிலுக்கான உதவிகள் ஏர் நிலம் சமூக அமைப்பால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வாழ்வாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள அந்தக் குடும்பம் பிரதேச சபையின் உப தவிசாளரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்த உதவி பெற்றுக்கொடுக்கப்பட்டது. (வ6)


## புரேவி தாக்கத்தால் ரூ. 34.5 மில். இழப்பு!

மன்னார், டிசெ. 7

மன்னார் மாவட்டத்தில் புரேவிப் புயல் தாக்கத்தால் கடற்றொழிலாளர்களுக்கு 34.5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் அலுவலர் பவநிதி தெரிவித்தார்.

மீனவர்களின் படகுகள், வலைகள், வாடி வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. அவை கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவற்றால் 34.5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.213)

# கொரோனாத் தடுப்பூசியை நாட்டில் சேமிப்பது கடினம்




கொழும்பு, டிசெ.7

**இலங்கை போன்ற வெப்ப வலய நாட்டில் பைசர் கொரோனாத் தடுப்பூசியை சேமிப்பது கடினம் என மருந்தகங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உற்பத்தி விநியோகம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார்.**

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அடுத்த ஆண்டு பெப்ரவரி நடுப்பகுதியில் இலங்கைக்கு கொவிட் தடுப்பூசி கிடைக்கலாம் என உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது. இதற்கு சுகாதார அதிகாரிகள் இரண்டு குழுக்களை நியமித்துள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் தடுப்பூசி வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை அவர்கள் அவதானித்து வருகின்றனர் என்றார்.

மேலும் இங்கிலாந்தில் அந்நாட்டு மக்களுக்கு ஒப்புதல் அளித்த பைசர் கொவிட் 19 தடுப்பூசியை 70 டிகிரி செல்சியஸில் வைக்க வேண்டும் என்றார். குளிர்ந்த காலநிலை நிலைமைகளைக் கொண்ட நாடுகளில், இதைச் செய்ய முடியும்.

இலங்கையில், எங்களுக்கு இது போன்ற வசதிகள் இரத்த வங்கி மற்றும் சில பல்கலைக்கழகங்களில் மட்டுமே உள்ளன.

ஒவ்வொரு சுகாதார பிரிவிலும் இந்த தடுப்பூசியை 70 டிகிரி செல்சியஸில் வைக்க ஏற்பாடுகளை செய்ய முடியாது. இது நடைமுறைக்கு மாறானது என்றார். (வ-இ)

## வெள்ள நிவாரணம் வழங்கல்

புரேவி புயலால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டது. (வ-63)



வலி.கிழக்கில்

## ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 7

புரேவி புயல் காரணமாக வலி. கிழக்குப் பிரதேசத்தில் ஆயிரக் கணக்கான வாழை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, நவக்கிரி, அச்சுவேலி, ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், இடைக்காடு, கரந்தன் போன்ற பகுதிகளில் வாழை மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

இந்த வாழைகளின் அழிவுகள் தொடர்பான தரவுகளை திரட்டும் நடவடிக்கையில் கமக்கார அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. (ஜ-17)



## திடீரென புகுந்த வெள்ளம் மூன்று குடும்பம் நிர்க்கதி

சாவகச்சேரி, டிசெ.7

மந்துவில் வடக்குப் பகுதியில் வீடுகளுக்குள் திடீரென வெள்ளம் புகுந்ததால் 3 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

புரேவி புயல் மற்றும் தொடர்மழையால் காரணமாக அருகில் உள்ள வயல்களிலும் வாய்க்காலிலும் வெள்ளம் நிறைந்தமையால் குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இரவு வேளையில், குழந்தைகள் மற்றும் முதியவர்களுடன் வெளியே செல்ல முடியாமல் தத்தளித்த அந்தக் குடும்பங்களை படையினர் மீட்டு அயலிலுள்ள உறவினர் வீடுகளில் தங்க வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வெள்ளத்தை வெளியேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

சாவகச்சேரி, டிசெ.7

தென்மராட்சி பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ளத்தை வெளியேற்றும் நடவடிக்கைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பில் இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன. கைதடி வடக்கு, நாவற்குழி மேற்கு, நுணாவில்,



கொடிகாமம் வடக்கு, சரசாலை மற்றும் மந்துவில் கிழக்கு ஆகிய இடங்களில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-9)

## 'நான் பொன்சேகாவுக்கு சீனியர்' பேஸ்புக் பதிவில் மனோ பதிலடி

கொழும்பு, டிசெ.7

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள கருத்து அவரின் தனிப்பட்ட அறிவிப்பாகும்.

அது ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு கிடையாது. புலிகளையும், ஜே.வி.பியினரையும் ஒன்றாக ஒப்பிடமுடியாது என்று சரத் பொன்சேகா கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இவரின் இந்தக் கருத்துக்கு இரண்டொரு தினங்களில் உரிய பதிலை வழங்குவேன் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் நேற்று முன்தினம் முகநூல் பதிவொன்றை பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சரத் பொன்சேகா என்னைப் பற்றி சபையில் நானில்லாத வேளையில், பேசியுள்ளார் என்பது என் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மரங்கொத்தி, மரம் மரமாக கொத்தி விட்டு, கடைசியில் வாழை மரத்துக்கு "குத்தி" மாட்டிக்கொள்ளுமாம். அது போல், இவர் என்னிடம் மாட்டிக்கொண்டுள்ளார்.

நான் அரசியல் "பொடியன்" அல்ல, அவரைவிட "சீனியர்" என்ற அடிப்படையில், அவருக்கு உரிய பதிலை, "சிங்கள பௌத்த வாக்குகள் எமக்குத் தேவை, ஆனால் அது தமிழ், முஸ்லிம் வாக்குகளை இழந்து, இனவாதம் பேசி பெற முடியாது" என சிங்கள மொழியில், அவருக்கு புரியும் முகமாக இரண்டொரு தினங்களில், நான் பகிரங்கமாகத் தருவேன் எனப் பதிவிட்டுள்ளார். (ற-இ)

நன்றி நவிலலும்
31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 13 • 02 • 1943

உதிர்வு 10 • 11 • 2020



எமது குடும்பத்தலைவர்

அமரர் செல்லையா செல்வரத்தினம்

அவர்கள் கடந்த மாதம் 10.11.2020 அன்று இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் ஊடாக ஆறுதல் கூறியோருக்கும், துண்டுப்பிரசுரங்கள் வழங்கியோருக்கும், மலர்வளையங்கள் சாத்தியோருக்கும் பதாகைகளை அமைத்தோருக்கும், இறுதிக்கிரியைகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் நல்கியோருக்கும் நோயுற்று இருந்த காலங்களில் அவருக்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கிய மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் ஏனைய உதவி வழங்கிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அவரின் அந்தியேட்டி கிரியைகள் **நாளை (08.12.2020) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில்** யாழ். வில்லூன்றி புனித தீர்த்த கரையிலும், **வியாழக்கிழமை (10.12.2020) காலை** எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்ம சாந்தி பிரார்த் தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வுகளிலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

மனைவி: 076 908 2960

சேரலதன்:(மகன்) 077 9235307

ராஜசுதன்: (பெறாமகன்) 0777 514327

இலக்கம்-147, A9 வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சி.

எழுதுமட்டுவாழ் பகுதியில்

## சிறுதானிய செய்கை முற்றாக அழிந்தது!

கொடிகாமம், டிசெ. 7

புரேவிப் புயல் மற்றும் மழை காரணமாக எழுதுமட்டுவாழ் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளின் சிறு தானிய பயிர்ச் செய்கைகளான உழுந்து, கௌபி, பயறு மற்றும் தோட்டப் பயிர்கள் அனைத்தும் முற்றாக அழிந்துள்ளன.

பயிரழிவு ஏற்பட்ட அப்பகுதி விவசாயிகள் எழுதுமட்டுவாழ் கமக்கார அமைப்பில் தமது பதிவுகளை வழங்கி வருகின்றனர். மேலும் முருங்கைத் தோட்டத்தின் மூலம் வாழ்வாதாரத்தைப் பெற்ற 10 குடும்பங்களின் ஆயிரத்து 500 முருங்கை மரங்கள் அழிவடைந்துள்ளதால் அந்த குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளன என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவித்தார். (ம-159)

# மழை தொடர்ந்து பெய்தால் நெடுந்தீவின் நிலை மோசமாகும்

*மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு*

**நெடுந்தீவு டிசெ. 7**

**புரேவிப் புயலால் நெடுந்தீவுப் பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனது கரையோரங்கள் கடலரிப்பால் பெருமளவாக உள்வாங்கப்பட்டுள்ளன. கடலரிப்பால் காவுகொள்ளப்படவுள்ள நெடுந்தீவைப் பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்தார் யாழ் மாவட்டச் செயலர் கே.மகேசன்.**

இலங்கையின் வடபகுதியில் ஏற்பட்ட புரேவிப் புயலால் அதிகம் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு பிரதேசத்தை பார்வையிட்டுத் திரும்பிய போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புரேவிப் புயலால் நெடுந்தீவு பிரதேசம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தீவின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

சில இடங்களில் 3 அடிக்கு மேல் வெள்ளம் நிறைந்துள்ளது. சில கிராமசேவையாளர் பிரிவுகள் முற்றாக முடக்கப்பட்டுள்ளன. மின்சாரம் நேற்று வரை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. மின் பிறப்பாக்கி வைக்கப்பட்டுள்ள அலுவலகத்தினுள் நீர் புகுந்துள்ளதால் அதனை உடனடியாக இயங்க வைக்க முடியாத நிலைமை தோன்றியுள்ளது. அது சம்மந்தமாக இலங்கை மின்சார சபையின் மாவட்ட மின் அத்தியட்சகருடன் தொடர்புகொண்டு பேசியுள்ளேன். விரைவாக மின் கிடைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். கடலை நம்பி வாழும் 40க்கும் மேற்பட்ட மீனவர்களின் படகுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. வலைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அவர்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை விரைவுபடுத்துமாறு பணித்துள்ளேன். கரையோரப் பிரதேசங்கள் கடுமையான கடலரிப்புக்குள்ளாகியுள்ளன. கரையோரத்தில் அமைந்துள்ள இரண்டு குடியிருப்பு வளவுகள் கடலரிப்பால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளமையை நேரில் அவதானித்துள்ளேன்.

பாதிக்கப்பட்டுள்ள சுமார் 760 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளை பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளார். அதனைத் துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன். வெள்ளம் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் மழையுடனான காலநிலை தொடருமானால் பாதிப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள சாதக பாதக நிலைமைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. இறங்கு துறை முற்றாகச் சேதமடைந்துள்ளதால் அதனைப் புனரமைப்ப தற்கான முயற்சிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்- என்றார். (ம)



## 'அறம்செய்' அறக்கட்டளையால் உதவிப் பொருள்கள் அன்பளிப்பு

மன்னார், டிசெ. 7

இரண்டு நாள்களாக பெய்த கடும் காற்றுடன் கூடிய மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் மன்னார் அறம்செய் அறக்கட்டளையால் வழங்கப்பட்டது.

புலம் பெயர் உறவுகளின் 'அறம் செய்' அறக்கட்டளை அமைப்பின் செயற்பாட்டாளர் டானியல் வசந்தவால் வங்காலை அந்தோனியார்புரம் இலுப்பைக்கடவை மூன்றாம் பிட்டி, தேவன் பிட்டி, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் தங்கியிருக்கும் மக்களுக்கே இந்த உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-159)

## 400க்கும் மேற்பட்ட வயல்களில் வெள்ளம்

கொடிகாமம், டிசெ. 7

எழுதுமட்டுவாழ் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட ஒட்டுவெளி செட்டிக்கேணி, குஞ்சுவிழுவளை, பெரிய விழுவளை ஆகிய வயல்வெளிகளில் 400க்கும் மேற்பட்ட வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஒட்டுவெளி வாய்க்கால் ஊடாகப் பாயும் நீர் ஓடமுடியாத காரணத்தால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார். (ம-159)

## கே.பியைப்போல மகேந்திரனையும் நாட்டுக்குக் கொண்டுவருவோம்!

*அமைச்சர் சரத் வீரசேகர சூளுரை*

கொழும்பு, டிசெ. 7



வெளிநாட்டிலிருந்து கே.பியை கொண்டுவந்ததுபோல் அர்ஜுன் மகேந்திரனையும் அழைத்துவந்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஒரு நாட்டு பிரஜையை மற்றுமொரு நாட்டுக்கு கொண்டுசெல்வதாக இருந்தால் சர்வதேச உடன்படிக்கை இருக்கவேண்டும். இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச பொலிஸின் பிரதான அதிகாரியுடன் பேச்சு நடத்தியுள்ளேன். உடன்படிக்கை இருப்பதால் அவரை ஒப்படைக்குமாறு சிங்கபூரிடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அர்ஜுன் மகேந்திரன் இந்த நாட்டுக்கு தீங்கு விளை வித்துள்ளார். நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார். கே.பியைக் கொண்டு வந்ததுபோல அவரையும் அழைத்துவந்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (ஒ.44)

# முனீஸ்வரன் வீதிப் பாதிப்பை நேரில் ஆராய்ந்தார் ஆனோல்ட்

யாழ்ப்பாணம், டிசெ. 7



புரேவிப் புயல் அசாதாரண நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களை யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் கடந்த வெள்ளிக்கிழமை நேரடிக் கள விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தார்.

இது தொடர்பில் அவரின் ஊடகப்பிரிவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

குறித்த வீதியில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கள், வடிகால் ஒழுங்கமைப்புக்கள் குறித்து முதல்வர் ஆராய்ந்தார்.

அந்தப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் முதல்வருடன் கலந்துரையாடினர்.

முதல்வரும் வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய தெளிவுகளை வழங்கினார்.

முதல்வரின் இந்தக் களப்பயணத்தில் யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசனும் இணைந்திந்தார். (ம)

## வெள்ளத்தில் புதைந்தது தவிசாளரின் வாகனம்

சாவகச்சேரி, டிசெ.7

வெள்ள நிலைமையை பார்வையிடச் சாவகச்சேரி பிரதே சபைத் தவிசாளர் சென்ற வாகனம் 3 அடி வெள்ளத்தில் சிக்கி பழுதடைந்தது. பின்னர் வேறு வாகனமொன்றின் உதவியுடன் தவிசாளரின் வாகனம் மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அல்லாரையில் இடம்பெற்றுள்ளது. (வ-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அபாயம் தவிர்ப்போம்

இம்முறை பெருமழை அவ்வளவு விரைவாக வடக்கை விட்டுப் போவதாகத் தெரியவில்லை. இன்னும் மூன்று தினங்களுக்கு இப்போதைய அடைமழை தொடரப் போகின்றது. அதைவிட இன்னொரு தாழமுக்கம் வங்காள விரிகுடாவில் உருவாகும் ஏதுக்களும் காணப்படுகின்றன. அப்படி இன்னொரு தாழமுக்கம் உருவாகி, இலங்கை திசை நோக்கி நகர்ந்தால் இன்னும் மழைப் பொழிவு நீடிக்கும். ஆக, இப்போதே வெள்ளத்தில் மிதக்கும் வடக்கின் பெரும்பாலான பகுதிகளும், நிறைந்து வழியத் தொடங்கியுள்ள நீர்நிலைகளும் மிதமிஞ்சிய மழையால் இன்னும் மோசமான நிலைக்குள் தள்ளப்படுவதற்கான அபாயம் மேலெழுந்துள்ளது.

இந்த அபாயத்தைத் தடுக்க அல்லது குறைக்க இரண்டே இரண்டு வழிகள் மட்டுமேயுள்ளன. ஒன்று, மழை வீழ்ச்சி சடுதியாக நிறுத்தப்பட வேண்டும். அது எவர் நினைத்தாலும் முடியாத காரியம். வேண்டுமானால் இயற்கை மனமிரங்கினால் மட்டுமே அதற்கு சாத்தியமுண்டு.

அடுத்த வழி, வெள்ள அபாயத்தில் இருந்து மீண்டெழுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ளல். இது மனிதசக்திக்கு உட்பட்ட விடயம். குறிப்பாக நீரேந்து நிலைகளான ஆறுகள், குளங்கள் என்பவற்றுக்கு அருகில் உள்ள மக்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்போதே பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தலாம். தேங்கி நிற்கும் வெள்ளத்தை விரைவாக வழிந்தோடச் செய்யும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தலாம். மீட்புப்பணிக்கான ஆளணியைத் தயார் நிலையில் வைத்திருக்கலாம். உலருணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகளை சேகரிக்கலாம். இப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வெள்ளத்தால் ஏற்படக்கூடிய அழிவுகளை ஓரளவுக்குத் தடுக்கமுடியும்.

அதைவிட இன்னொரு வகையில் நிகழும் இழப்புகள் தான் அதிக துயரைத் அவை, வெள்ளத்தை வேடிக்கை பார்க்கப் போய் அல்லது நிறைந்துள்ள நீர்நிலைகளில் நீராடப் போய் இளைஞர்கள் மாண்டுபோவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இப்போது விடாமல் பொழிந்து கொண்டிருக்கும் பெருமழையால் இந்த நீர்நிலைகளின் நீர்மட்டங்கள் சடுதியாக இன்னும் உயரத்தான் போகின்றன. அந்தச் சமயத்தில் செல்பி எடுப்பதற்காகவும், படம் காட்டுவதற்காகவும் வேடிக்கை பார்ப்பதையும் தாண்டி இளைஞர்கள் அபாயப் பகுதிக்குள் அச்சமின்றிச் செல்கின்றனர். அதன்போது எதிர்பாராத விதமாக நீரில் அடித்துச் செல்லப்பட்டு, பரிதாபமாக உயிரிழக்கவும் செய்கின்றனர்.

இன்னும் சிலர் ஆபத்தை உணராமல் இந்த மழைக் காலத்திலும் நிறைந்து வழியும் நீர்நிலைகளில் நீச்சலடிக்க முனைகையிலும் உயிராபத்துகள் நேர்கின்றன. கடந்த சில நாட்களுக்குள்ளேயே இவ்வாறான சம்பவங்களில் இளைஞர்கள் சிலரது உயிர்கள் பறிபோயுள்ளன. இவ்வாறான சாவுகள் வலிந்து நாமே தேடிச் செல்பவை. அந்த இளைஞர்கள் அவதானமாக, அறிவுறுத்தல்களின் படி செயற்பட்டிருந்தால் அல்லது பாதுகாப்பாக வீட்டிலேயே இருந்திருந்தால் இப்படியான அவலச்சாவுகள் வந்திருக்கப்போவதில்லை. பெற்றோரும் இத்தகைய இடர்காலங்களில் தங்கள் பிள்ளைகளை அபாயப்பகுதிகளுக்குச் செல்லாமல் கண்காணிப்பது அவசியம். வீணான உயிரிழப்புகளைத் தவிர்க்க , இந்த மழைக் காலத்திலாவது கொஞ்சம் துள்ளித் திரியாமல், துடுக்கடக்கி நல்ல பிள்ளைகளாக நீர்நிலைகள், வாய்க்கால்கள் என்பவற்றுக்குச் செல்வதைத் தவிர்ப்பதே சாலச் சிறந்தது.

# மஹர சிறைச்சாலை மோதல் 116 பேரிடம் வாக்குமூலம்

### 5 சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

**கொழும்பு, டிசெ. 7**

**மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் இதுவரை 116 பேரிடம் வாக்குமூலங்களை பதிவுசெய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.**

சிறைச்சாலை மருத்துவமனையில் பணியாற்றிய மருத்துவர்கள் 11 பேர், சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள் 53 பேர், சிறைச்சாலை அதிகாரிகள் 43 பேர் உட்பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் 12 பேரடங்கிய சி.ஐ.டி. குழுவினரே விசாரணை நடத்திவந்தனர். தற்போது அந்த எண்ணிக்கை 25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, மோதல் சம்பவத்தில் உயிரிழந்த 11 கைதிகளில் இதுவரை 6 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. (ஒ,44)

## இலங்கைக்கு கடத்தப்பட்ட ரூ.300 கோடி பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 7

டுபாயிலிருந்து இலங்கைக்கு கடல்மார்க்கமாக கடத்தப்பட்ட 100 கிலோ ஹெரோய்ன், மற்றும் 100 கிலோ ஐ.எஸ். போதைப்பொருள் ஆகியன நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், நான்கு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி 300 கோடி ரூபா என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டுபாயிலிருந்து இலங்கைக்கு கடல்மார்க்கமாக போதைப்பொருள் கடத்தப்பட்டுள்ளது என மதுவரித்திணைக்கள அதிகாரிகளுக்கு அண்மையில் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து கடற்படை மற்றும் புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் கூட்டு நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது. மாரவில தொட்டுவாவ பகுதிக்குச்சென்ற மதுவரித் திணைக்கள அதிகாரிகள் இதன் பின்னணி பற்றி ஆராய்ந்தனர். இந்நிலையிலேயே நேற்றுக் காலை கைதும், கைப்பற்றலும் இடம் பெற்றுள்ளது.

போதைப்பொருள்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட கார், வேன் மற்றும் டிக் வாகனமொன்றையும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ஒ,44)

## நவீன், ரணதுங்க சஜித்துடன் சங்கம்!

கொழும்பு, டிசெ. 7

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலர் சம்பிக்க ரணவக்க, முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கவுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் சஜித் பிரேமதாச தலைமையில் நாளைமறுதினம் கட்சி தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது கட்சி யாப்பு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. கட்சி யாப்பை கடந்த 30 ஆம் திகதி வெளியிடுவதற்கே தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், சம்பிக்க, நவீன் போன்றவர்களின் வருகை தொடர்பில் வெளியான சமிக்ஞைகளையடுத்து அது பிற்போடப்பட்டது. சம்பிக்க ரணவக்க, நவீன் திஸாநாயக்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் பெறும் பட்சத்தில் அவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஒ,44)

# 20ஐ ஆதரித்த முஸ்லிம் எம்.பிக்கள் பட்ஜெட் வாக்கெடுப்பில் நழுவ முடிவு

கொழும்பு, டிசெ. 7

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ராஜபக்ச அரசின் முதலாவது பட்ஜெட் கடந்த நவம்பர் 17 ஆம் திகதி நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. நவம்பர் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை 2 ஆம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்று அன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அரசும் அதன் தோழமைக்கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தன. ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் எதிர்த்து வாக்களித்தன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த 'சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர், படஜெட் தொடர்பான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலத்தை அடக்கம் செய்வதற்கு தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்படுவதாலேயே அவ்வாறானதொரு முடிவை முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்திருந்தனர். எனினும், 20ஐ ஆதரித்த ரிஷாத் கட்சி உறுப்பினர்கள் பட்ஜெட்டுக்கும் நேசக்கரம் நீட்டினர்.

ஆனால் வரவு செலவுத்திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போது ரிஷாத் கட்சி உறுப்பினர்களும் பட்ஜெட்டை எதிர்க்ககூடும் எனத் தெரியவருகின்றது.

பட்ஜெட்டை நிறைவேற்றிக்கொள்வதற்கு சாதாரணப்பெரும்பான்மை போதுமாதனது. எனவே, எதிரணியின் ஆதரவு ஆளுங்கட்சிக்கு அவசியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, வரவு செலவுத் திட்டத்தில் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை பிரதமர் 10 ஆம் திகதி சபைக்கு அறிவிப்பார். (ஒ,44)

# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்!

ராசி மண்டலத்தில் வலம் வரும்போது, சந்திரன் இருக்கும் ராசியிலிருந்து பன்னிரண்டிலும், சந்திரன் இருக்கும் ராசியிலும், அடுத்து சந்திரனில் இருந்து 2ஆவது ராசியிலும் இரண்டரை வருடங்கள் தங்கியிருந்து, பயணிப்பார் சனி.

ஏழரைச் சனி என்றதும் பயம்கொள்ளத் தேவையில்லை. அப்படியே அஷ்டமத்துச் சனி, ஜென்மச் சனி போன்ற நிலைகளை எண்ணியும் கலங்க வேண்டியதில்லை. சனி பகவான் நம் வினைகளைக் கரைக்க அருள்செய்பவர். நம்மை வளர்த்து, நமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, இன்ப,துன்பங்களை வினைப்படி செயல்படுத்தி, வாழவைப்பவர்.

நிகழும் சார்வரி வருடம் மார்கழி 11ஆம் நாள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 4:49 மணிக்கு (விடிந்தால் 27.12.2020) உத்திராடம் நட்சத்திரம் 2ம் பாதம் மகர ராசிக்குப் பெயர்ச்சி ஆகிறார் (வாக்கியப் பஞ்சாங்கப்படி). இந்தப் பெயர்ச்சியில் பன்னிரு ராசிகளுக்கும் அவர் அருளப்போகும் பலாபலன்கள் இங்கே தரப்படுகின்றன.



## கடகம்

அயராத உழைப்பாளி நீங்கள். சனி பகவான் 27.12.2020 முதல் 19.12.2023 வரை, 7ஆம் வீட்டில் அமர்கிறார். நீங்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என்றாலும் சனிபகவான் ஆட்சிப் பெற்று அமர்வதால், குடும்பத்தில் வீண் விவாதங்கள் வந்தாலும் பெரிதாக பாதிக்காது.

கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போகவும். உறவினர்கள், நண்பர்கள் சிலர் உங்களுக்குள் குழப்பம் ஏற்படுத்தலாம். விலை உயர்ந்த நகைகளைக் கவனமாகக் கையாளுங்கள். வரி கட்டுவதில் தாமதம் வேண்டாம். வங்கிக் காசோலைகள், ஆவணங்களில் கையெழுத்து இடுவதில் கவனம் தேவை. மனைவிக்கு ஆரோக்கியம் பாதிக்கும். மகனின் உயர் கல்விக்காக சிலரின் சிபாரிசை நாட வேண்டியிருக்கும். உத்தியோகம், வியாபாரத்தின் பொருட்டு குடும்பத்தைப் பிரிய வேண்டி வரும். இரவு நேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பிரபலங்கள், வேற்று மொழிக்காரர்கள் உதவுவார்கள். 29.03.2023 முதல் 24.08.2023 வரை, சனி அதிசாரத்தில் 8ம் வீடான கும்ப ராசியில் அமர்வதால், இனந்தெரியாத கவலை, பொருள் இழப்பு, வாகன விபத்து வந்து செல்லும்.

**சனி பகவானின் பார்வை...**

சனிபகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால், அலர்ஜியால் தோலில் நமைச்சல், கட்டி கல் வரவும், முடி உதிர்வதற்கும் வாய்ப்புள்ளது. நேரம் தவறி சாப்பிட வேண்டாம். செரிமானக் கோளாறு வந்து நீங்கும். உணவில் உப்பு, புளி, காரம் அதிகம் வேண்டாம். மறதியும், பித்தத்தால் தலைச்சுற்றலும் வந்து நீங்கும். சனி பகவான் 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தாயாரின் உடல்நலம் பாதிக்கும். அவருடன் வீண் விவாதங்கள் வந்து செல்லும். சனி பகவான் உங்களின் 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் கையிருப்புகள் கரையும்; வெளியில் கடன் வாங்க நேரிடும்.

**சனி பகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

உங்களின் தன ஸ்தானாதிபதியான சூரியனின் உத்தராடம் நட்சத்திரத்தில் 27.12.2020 முதல் 27.12.2021 வரை சனி பகவான் செல்வதால் இக்கால கட்டத்தில் பிரபலங்கள் உதவுவார்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். சொத்துப் பிரச்னைகள் தீரும். இதற்கிடையில் 11.05.2021 முதல் 26.09.2021 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் பணத்தட்டுபாடு, வீண் பகை, அரசு விஷயங்களில் இழுபறி நிலை உண்டாகும்.

உங்கள் ராசிநாதனான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில் 28.12.2021 முதல் 26.01.2023 வரை சனி பகவான் செல்வதால் திடீர் யோகம், பண வரவு, அரசு மரியாதை, வீடு, மனை வாங்குதல் போன்றவை தேடி வரும். இதற்கிடையில் 25.05.2022 முதல் 09.10.2022 வரை சனி பகவான் வக்ரத்தில் செல்வதால் ஏமாற்றங்கள், இழப்புகள், மருத்துவச் செலவுகள் வரக்கூடும்.

உங்களின் யோகாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் 27.01.2023 முதல் 19.12.2023 வரை சனிபகவான் செல்வதால், சுபகாரியம், பிள்ளைகளால் பெருமை, சமூகத்தில் அந்தஸ்து, உத்தியோகத்தில் பதவி உயர்வு ஆகியவை உண்டாகும். 27.06.2023 முதல் 23.10.2023 வரை சனி வக்ரத்தில் செல்வதால் திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். எதிர்த்துப் பேசியவர்கள் வலிய வந்து ஆதரித்துப் பேசுவார்கள்.

இல்லத்தரசிகளே! கணவரின் சின்னச் சின்ன கோபங்களையெல்லாம் பெரிதாக்க வேண்டாம். உடல்நலனில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அலுவலகம் செல்லும் பெண்கள், சக ஊழியர்களை விமர்சித்துப் பேசவேண்டாம்.

வியாபாரிகள், கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்தவோ, கூட்டுத் தொழிலில் ஈடுபடுவதோ வேண்டாம்.

வேலையாள்களிடம் தொழில் சம்பந்தப்பட்ட ரகசியங்களைப் பகிரவேண்டாம். வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பேசுங்கள். கடன் தருவதைத் தவிருங்கள். லாபம் வரும். பங்குதாரர்களுடன் மோதல்கள் எழும்.

உத்தியோகஸ்தர்களே, அடிக்கடி விடுப்பில் செல்லாதீர்கள். மூத்த அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ள வேண்டாம். மேலதிகாரிகளைப் பற்றிய அந்தரங்க விஷயங்களை வெளியில் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும். எதிர்பாராத இடமாற்றம் உண்டு. ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திட வேண்டாம். கணினித் துறையினருக்குப் பிரச்சினைகளைச் சமாளிக்கும் வல்லமை கிடைக்கும்.

**பரிகாரம்:** வீட்டில் விளக்கேற்றி அம்பாளை வழிபடுங்கள். நவகிரகச் சந்நிதியில் வலம் வந்து வேண்டிக்கொள்ளுங்கள்; முன்னேற்றம் உண்டாகும்.

# போதையாகப் பயன்படுத்தும் மருந்துகள் எவையும் இல்லை

*ராஜித சுட்டிக்காட்டு*



கொழும்பு, டிசெ.7

போதைப்பொருளாக பயன்படுத்தக் கூடிய மருந்து எதுவும் மேற்கத்தேய மருத்துவத்தில் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மனநிலை சரியில்லாதவர்களுக்குரிய மருந்துகளை உட்கொண்டால் கட்டுக்கடங்காத முறையில் மஹர சிறைக் கைதிகள் செயற்பட்டனர் என அமைச்சர் விமல் வீரவன்ச நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கைதிகளின் மரணங்களை மறைக்கவே இதுபோன்ற பொய்கள் கூறப்படுகின்றன.

இந்தக் கருத்துக்கள் முட்டாள்தனமானவை. இதனை தேசிய மனநல நிலையமும் மறுத்துள்ளது என ராஜித மேலும் தெரிவித்தார். (வ-இ)



# ஐ.தே.கவுக்கு புதிய பதில் செயலாளர்!

கொழும்பு, டிசெ.7

ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக வடமேல் மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பிரசன்ன சமல் செனரத் தெரிவாகியுள்ளார்.

அண்மையில் அகிலவிராஜ் காரியவசம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிலிருந்து விலகியதை அடுத்து இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் 2020 டிசெம்பர் 31 வரை அமுலில் இருக்கும் என்றும் பிசன்ன சமல் செனரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் தினங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# விதை மஞ்சளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்!

*ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் எச்சரிக்கை*



கொழும்பு, டிசெ.7

மஞ்சள் பயிர் செய்கையாளர்கள் உரிய காலத்துக்கு முன்பே மஞ்சளை அறுவடை செய்வதால் எதிர்வரும் வருடத்தில் நாட்டில் விதை மஞ்சள் கிழங்குக்கு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது என ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது நாட்டினுள் காணப்படும் மஞ்சள் பற்றாக்குறை மற்றும் மஞ்சள் விலை ஏற்றத்தால் மஞ்சள் முதிர்ச்சியடையும் முன்பே அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் விவசாயிகள் மட்டுமன்றி நாடும் பெரும் இழப்பைச் சந்திக்கவுள்ளது என ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்தி பணிப்பாளர் உபுல் ரணவீர தெரிவித்தார். (வ-இ)

காணியை வழங்கக்கோரி

# அரச காணியில் கொட்டில்கள் அமைத்து மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, டிசெ.7

**காணிகள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, புதுக்குடியிருப்பு, வேணாவிலைச் சேர்ந்த மக்கள், அரசு காணிகளில் கொட்டில்கள் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 40 குடும்பங்கள் நேற்றுமுன்தினம் இவ்வாறு போராட ஆரம்பித்துள்ளன.**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட வேணாவில் கிராமத்தில் 40 குடும்பங்களுக்கு இதுவரை காணியில்லாத நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் கடந்த ஆண்டு கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் இதுவரை காணி வழங்காத நிலையில் கிராமத்தில் உள்ள அரச காணியில் கொட்டில்களை அமைத்தே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இரவல் நிலத்தில் இவ்வளவு காலமும் வாழ்ந்து விட்டோம் எங்களுக்கான காணியை நாங்களே பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் தெரிவித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சொந்தக் காணி இல்லாத காரணத்தால், 40 குடும்பங்களுக்கும் எந்த வாழ்வாதார உதவிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. சொந்த மாகக் காணி கிடைக்கும்வரை இந்தப் போராட்டம் தொடரும் என்று மக்கள் எச்சரித்துள்ளனர்.



## 74 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி

யாழ்ப்பாணம், டிசெ.7

தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ள காக்கைதீவுப் பகுதியைச் சேர்ந்த 74 குடும்பங்குளுக்கான உலர் உணவுப் பொதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் 'மனிதம்' அமைப்பால் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. சமூக ஆர்வலர்கள் பலர் இதற்கான நிதியுதவியை அளித்திருந்தனர். (வ)



## ரூ.2 இலட்சம் பெறுமதியில் உலர் உணவுப் பொருள்கள்

முல்லைத்தீவு, டிசெ.7

முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு 2 இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபா பெறுமதிமான உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. தாய்த்தமிழ் பேரவை ஊடாக புலம்பெயர் தமிழரான கந்தப்பிள்ளை திலீபனின் நிதிப்பங்களிப்பில் இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்தப் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. (ற-222)



## கனடாவாசியால் மாணவிக்கு ரூபா.50,000 உதவித் தொகை

முல்லைத்தீவு, டிசெ.7

முல்லைத்தீவு அலைகல்லுப்போட்ட குளம் அ.த.க. பாடசாலையில் தந்தையைப் பிரிந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் மாணவி ச.டிசானா இந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவியின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக கனடா நாட்டில் வசித்து வரும் ப.பகீரதன், மாணவிக்கு ஐம்பதாயிரம் ரூபா பண உதவி, துவிச்சக்கரவண்டி மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ற-222)

## மன்னாரில் கரையொதுங்கிய கண்ணாடியிழைப் படகு மீட்பு!

மன்னார், டிசெ.7

தலைமன்னார் 'பியர்' கடற்பரப்பில் கண்ணாடியிழைப் படகு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை அந்தப் பகுதி மீனவர் களால் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

தலைமன்னார் கடல் பகுதிக்கு சற்றுத் தொலைவில் நீரில் மூழ்கிய நிலையில் கரையொதுங்கி வந்த கண்ணாடி இழைப் படகை அந்தப் பகுதி மீனவர்கள் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட படகு தலைமன்னார் பியர் இறங்குதுறைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்தப் படகு தொடர்பில் தலைமன்னார் பியர் மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

மீட்கப்பட்ட படகில் 'அமுத விஜிஸ்ரெபானி' எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது தலைமன்னார் பியர் கடற்கரைப்பகுதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு முன் பாதுகாப்பாக இந்தப் படகு வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-56)



## திருமலையில் திருடப்பட்டது அம்மன் சிலை!

திருகோணமலை, டிசெ.7

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் சிறி நாக கன்னி அம்மன் ஆலயத்தில் வழிபட்டு வந்த கருமாரி அம்மன் சிலை திருடப்பட்டுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இந்தக் கோயில் கூரையின் ஓடுகளைப் பிரித்து உள் நுழைந்தவர்களால் இந்தச் சிலை திருடப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்திலிருந்து தற்போது திருடப்பட்ட சிலையானது யுத்த காலத்தின்போது காணாமல் போயிருந்தது. பின்னர் இந்த வருடம் ஆலயத்தில் இடம்பெற்ற வைகாசி விசாக பூசையின் போது ஆலய வளாகத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இதன் பின்னர் ஆறு மாதங்களாக இந்தச் சிலை ஆலயத்தில் வைத்து வழிபாடு செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது திருட்டுப் போயுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

இந்த அம்மன் சிலை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் நேற்றுமுன்தினம் மாலை சேருநுவர பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாட்டுக்கு அமைய நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை பொலிஸார் மோப்ப நாய்களைக் கொண்டு தேடுதல் நடத்தினர் எனவும் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரியவருகின்றது. (ற-இ)


## குடியிருப்புக்குள் வெள்ளம்; வெறியேற மறுக்கும் மக்கள்

சாவகச்சேரி, டிசெ.7

தொடர் மழையால் நாவற்குழி கோவிலாக்கண்டி கடலேரி நீர்மட்டம், அதிகரித்து சுமார் 100 அடி தூரத்துக்கு குடியிருப்புகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

குடிமனைகள் பலவற்றுக்குள் வெள்ளம் உட்புகுந்துள்ளது. ஆனாலும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் புகுந்த இடங்களை சாவகச்சேரி சுகாதார திணைக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பார்வையிட்டுள்ளதுடன் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளனர். (வ-9)



# இன்றைய நாள்

**மேடம்:** பேச்சினால் சில விஷயங்களை முடிக்கும் நாள். உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும். ஒற்றுமையால் வீடு களை கட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பெறுவீர்கள்.

**இடபம்:** கடந்த நாள்களின் வருத்தங்கள் மறையும் நாள். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சி பற்றி பேசுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகம் வரும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** செலவினங்கள் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும். லேசான வருத்தமளிக்கும் செய்தி வரும். பணிகளில் மிகுந்த கவனம் தேவை.

**கடகம்:** திட்டமிடாத செலவுகள் வரும் நாள். பிறரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மேலதிகாரி உங்களை தவறாக புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குப் பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** மாறுபட்ட நாள். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் மதிப்பார்கள். அலுவலகத்தில் இழந்த உரிமைகள் மீளும். தொழிலில் சிறு மாற்றம் உண்டாகும். மனக்கலக்கங்கள் தீரும்.

**கன்னி:** பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிக்கும் நாள். முயற்சியால் சில விஷயங்கள் வெற்றியாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து தேவையின்றி கவலைப்படுவீர்கள்.

**துலாம்:** அதிகம் உழைக்க வேண்டியிருக்கும் நாள். நிலுவைத் தொகைகள் வசூலாகும். அலுவலகத்தில் உங்களின் புகழ் கூடும். திட்டமிட்ட செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தம்பதி இடையே கருத்து வேறுபாடு வந்து நீங்கும் நாள். பழைய கடனை நினைத்து கவலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சுலபமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** பணியில் விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். நண்பர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் சிறு ஏமாற்றத்தைச் சந்திப்பர். வெளியூரிலிருந்து சுபச்செய்தி செய்தி வரும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றும் நாள். பணவரவு திருப்தி தரும். பெண்கள் பாடுபட்டு இலட்சியத்தை அடைவர்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் நாடி வருவார்கள்.



படம்: குமணன்

நேற்று மதியம் மீண்டும் தொடங்கிய மழை. வெள்ளக்காடாகிய நல்லூர் ஆலயச் சூழல்

# சிங்களவர்களைத் தூற்றும் தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் வருவதைத் தடை செய்யவேண்டும்

## *கொக்கரிக்கின்றார் அமைச்சர் சரத் வீரசேகர*

கொழும்பு, டிசெ. 7

சிங்களவர்களுக்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்துக்கு வருவதைத் தடை செய்யவேண்டும். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டுக்காகச் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

இலங்கையில் சமஷ்டியை அறிமுகப்படுத்துவது குறித்து அவர்கள் வேறு நாட்டுடன் பேச்சுகளை மேற்கொள்வார்கள் என்றால் அது அவர்கள் மேற்கொண்ட சத்தியப்பிரமாணத்துக்கு முற்றிலும் விரோதமானது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தவறிழைத்துவிட்டார் என நான் கருதுகின்றேன். அவர் தமிழ் அரசியல்வாதிகள் குறித்து அனுதாபமுள்ளவராக இருந்ததால் அந்தத் தவறை இழைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டபோது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச தமிழ் அரசியல்வாதிகள் குறித்து அனுதாபம் கொண்டிருந்தார். அவர் அவர்களை மன்னித்தார். தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைச் சாதகமாகப் பயன்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னரே நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்தவர்கள் உட்பட எங்கள் படையினரைக் கொலைசெய்த பண்டிதரின் வீட்டுக்குச் சென்ற சுமந்திரன் மாவீரர் தினத்தை விளக்கேற்றி கடைப்பிடிக்கின்றார். பண்டிதருக்குப் புகழாரம் சூட்டுகின்றார்.

தனது பாதுகாப்புக்கு அளிக்கபபட்ட விசேட அதிரடிப் படையினரை தனது வீட்டின் வெளியே வைத்துக்கொண்டே எங்கள் பாதுகாப்புப் படையினரின் கொலையாளிக்கு அஞ்சலி செலுத்தும் தைரியம் சுமந்திரனுக்கு வந்துள்ளது.

அதன் பின்னர் அவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு தனது நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குறித்து பேசுகின்றார். சிங்களவர்களுக்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்துக்கு வருவதைத் தடை செய்ய வேண்டும், என்றார். (ஒ,22)

# கிளிநொச்சி பொதுநூலகத்துக்கு ஆலோசனைக் குழு உருவாக்கம்

கிளிநொச்சி, டிசெ.7

கிளிநொச்சி பொதுநூலகம் அமைப்பதற்கான ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையால் 2021 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படவுள்ள பொதுநூலகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போதே இந்தக் குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. குழுவில் முன்னாள் கல்வி அமைச்சரும் கிளிநொச்சி கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா, பொறியாளர் க.கடம்பசீலன் மருத்துவர்கள் மு.சிறீதர், குகராஜா, யோ.கௌதமன், திருலோகமூர்த்தி, சட்டத்தரணி ச.விஜயராணி அதிபர்களான பூலோகராஜா, கணேசன், ஜோயல் பியசீலன், சூரியகுமாரி உட்படப் பலர் அங்கம் வகிக்கின்றனர்.

குழுவில் உள்ளவர்களின் வழிகாட்டலில் மக்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்பளித்து கிளிநொச்சி பொதுநூலகத்தை அமைக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (வ-6)




# மீராவோடை பகுதியில் டெங்கு விழிப்புணர்வு

மட்டக்களப்பு, டிசெ.7

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

'டெங்கை இல்லாமல் செய்வோம்; எமது பிரதேசத்தை சுத்தமாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த வேலைத்திட்டத்தில் மீராவோடை ஆட்டோ சங்கம், பிரதேச விளையாட்டு கழகங்கள் மற்றும் பிரதேச பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது டெங்கு நோய் பரவும் வகையில் நீர் தாங்கி மற்றும் கழிவுகளை வைத்திருந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் சுத்தம் இல்லாமல் மீண்டும் வைத்திருந்தால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-150)

# கொரோனா நடைமுறை மீறிய 30 பஸ்களின் அனுமதிகள் ரத்து



கொழும்பு, டிசெ. 7

அரசு பிறப்பித்த கொவிட்-19 சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 30 பஸ்களின் அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவ்வாறு அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொவிட்-19 வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்கத் தவறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (து-இ)

# தமிழ் மக்களுக்கு நாட்டில் அதிகளவு அச்சுறுத்தல்கள்

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 7

தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படியே பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர். மக்கள் சார்பில் பாராளுமன்றத்தில் கருத்துகளை கூறுவதற்கும், உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு தொடர்பில் அல்லாமல் ஏனைய விடயங்களை பேசுவதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்கின்றது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் துவேசம் கக்கும் உறுப்பினர்களே அதிகம் இருக்கின்றனர். அவ்வாறு துவேசம் பேசும் ஒரு அமைச்சர்தான் கூட்டமைப்பினரை தடைசெய்யவேண்டும் என சொல்கின்றார். அவருக்கு அதற்கான அதிகாரம் கிடையாது. மக்கள் நினைத்தால் மட்டுமே அதனை செய்யமுடியும். அவரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம்.

சரத் பொன்சேகாவும் தமிழ் மக்களின் மனம் புண்படும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அதனையும் கண்டிக்கின்றோம்.

பிள்ளையானை விடுதலைசெய்தது எமக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு தமிழ் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கை. அப்போதுதான் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பது நடைமுறை சாத்தியமாகும். இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலான சூழ்நிலை அதிகரித்துள்ளது.' என்றார். (ம-44)



# விஷம் உடலில் பரவியதால் கண்டியில் சாகின்றன குரங்குகள்;

கொழும்பு, டிசெ. 7

கண்டி நகருக்கு அருகில் உள்ள உடவத்தகெலே வனவிலங்கு பூங்காவில் சில நாள்களாக திடீரென அதிகளவான குரங்குகள் உயிரிழந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் குரங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஏதோ ஒரு வகையான விஷம் உடலில் பரவியுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் குரங்குகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பி.சி.ஆர். பரிசோனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் குரங்குகளுக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை. மாறாக அவற்றின் உடல்களில் விஷம் பரவியதனால் அவை உயிரிழந்துள்ளன என்றும் போதனைப் பல்கலைக்கழகத்தின் காலநடை பீட அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (து-இ)



# கீரிமலை - இளவாலை வரை மரக்கன்றுகள் நேற்று நடுகை

யாழ்ப்பாணம், டிசெ. 7

தேக்கு, மருது, வாகை மரக்கன்றுகள் கீரிமலையிலிருந்து இளவாலை ஆலடி சந்தி வரை நேற்று நடுகை செய்யப்பட்டன. விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 3ஆம் கட்ட 'பசுமையான யாழ்' செயற்றிட்டத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அமரர் கந்தசாமி கணேசலிங்கத்தின் ஞாபகார்த்தமாக இவை நடுகைசெய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், 513 ஆம் படைப்பிரிவின் இராணுவத் தளபதி நிசங்க மற்றும் கிராமத்தவர்கள், இளைஞர்கள் கலந்துசிறப்பித்தனர். (து-222)

# வாழைச்சேனையில் டெங்குத் தாக்கம்!



மட்டக்களப்பு, டிசெ. 7

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி வரை 415 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கின் தாக்கம் அதிகம் உணரப்பட்டுள்ளது. இது தொடர்பில் மக்களுக்கு உரிய விழிப்புணர்வுகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் துப்புரவுப் பணிகள் குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது வீட்டு வளாகத்தினுள் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருள், நீர் தேங்கி காணப்படும் பொருள்கள், கழிவுப் பொருள்கள் உட்பட்ட பல்வேறு பொருள்கள் அகற்றப்பட்டன - என்றார். (ம)

# ஜனாதிபதியின் முடிவால் அரசுக்குள் குழப்பநிலை

கொழும்பு, டிசெ. 7

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை கலைப்பது என்று ஜனாதிபதி எடுத்த முடிவு, அரசுக்குள்ளேயே மோதலை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தனது அதிருப்தியை, கடிதம் மூலம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அனுப்பியுள்ளார்.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவை கலைப்பது அரசின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு முரணானது. ஆணைக்குழுவை கலைப்பது தொடர்பான முடிவை பிரதமரே எடுக்க முடியும் என்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

# பயணத் தொடக்கத்தில் இனி இரண்டு பஸ்கள்

## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 7

நாடு முழுவதும் இன்று தொடக்கம் ஒவ்வொரு பயணத்தின் தொடக்கத்திலும் இரண்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலம் அமுனுகம தெரிவித்துள்ளார்.

விசேடமாக புதிய பயண முறைக்கமைய, பாடசாலை நேரத்திலும் அலுவலக நேரத்திலும் இரண்டு பேருந்துகளை இயக்க போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பயணிகள் ஆசனங்களுக்கு மாத்திரம் போக்குவரத்து பயணம் மேற்கொள்வதற்காககடந்தகாலங்களில்கட்டணத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், சில பகுதிகளில் அதிகமாக பயணிகள் பேருந்துகளில் அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று முறைப்பாடு கிடைத்துள்ளது. எங்களுக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனால் இன்று தொடக்கம் அவ்வாறு செய்யும் பஸ்களின் சாரதிகள் கைதுசெய்யப்பட்டு தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். என்று மேலும் தெரிவித்தார். (த-இ)



# ஆறுமுகநாவலர் தினம் மதமாற்றத் தடை நாள்

## வவுனியாவில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 7

ஆறுமுகநாவலரின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் நினைவுதினம் நேற்று. வருடாந்தம் கார்த்திகையில் ஆறுமுகநாவலர் நினைவுதினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டம் உட்பட வடக்கின் 5 மாவட்டங்களிலும் மதமாற்றத்துக்கு எதிராக ஆறுமுகநாவலர் படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு அவரது நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியாவில் பஸ் தரிப்பிடம், கோவில்கள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் நூலகங்கள் உட்பட பல்வேறு இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (த-402)

# மு.கா.விலிருந்து விலகினார் அலி ஷாஹிர் மௌலானா

கொழும்பு, டிசெ. 7

நல்லாட்சி அரசின் இராஜாங்க அமைச்சர் அலி ஷாஹிர் மௌலானா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகியுள்ளார்.


இது தொடர்பில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் கட்டாய தகனங்களை நிறுத்துமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை கடந்த செவ்வாய்க்கிழமை உயர்நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து தாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளேன் என்று மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று குற்றம் சுமத்திய அவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் உள்ளவர்கள் தமது தனிப்பட்ட விடயங்களுக்கே முக்கியத்துவம் வழங்குகின்றனர். நாடு மற்றும் சமூகம் தொடர்பான அக்கறை அவர்கள் மனங்களில் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸின் சில உறுப்பினர்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக "வெட்கமின்றி, துணிச்சலுடன்" வாக்களித்தனர் என்றும் மௌலானா தெரிவித்துள்ளார். இந்தச் செயல் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வேலைகளையும் முன்னேற்றத்தையும் சிதறடித்து விட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி உறுப்பினர்களின் போலி, ஏமாற்றும் மற்றும் ஆபத்தான நடத்தை குறித்து தனிப்பட்ட முறையில் வெறுப்படைந்தேன், வெட்கப்பட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்து காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த சுதந்திரம் அளித்ததைக் கேட்டு திகைத்துப் போனேன் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)



# ஆசிரியருக்கு கொரோனா; மூடப்படுகிறது பாடசாலை

ஹற்றன், டிசெ. 7

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட நோர்வூட் தமிழ் மகாவித்தியாலயம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் காலவரையறையின்றிப் பூட்டப்படுகின்றது என்று மஸ்கெலியா பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி டி. சந்திரராஜன் தெரிவித்தார்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் பொகவந்தலாவை ஆரியபுர பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கும் அவரது குழந்தைகள் இருவருக்கும் கொவிட் -19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியை கடந்த 28ஆம் திகதி மற்றும் 30ஆம் திகதிகளில் பாடசாலைக்குச் சமூகமளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பாடசாலையில் ஆயிரத்து 500 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 76 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். (த-இ)

# சுற்றுச் சூழல் விடயத்தை கவனிக்காத அபிவிருத்திக்கு எதிராக போராட்டம்

கொழும்பு, டிசெ. 7

தற்போதைய அரசின் அபிவிருத்தித் திட்டங்களின்போது, முக்கியமான சுற்றுச்சூழல் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படாமையை வலியுறுத்தி, பொலநறுவையில் நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. மாதுருஓயா, வஸ்கமுவ, சேமாவதி, போன்ற சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை அழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ள வீதி நிர்மாணப் பணியை உடனடியாக நிறுத்துமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சட்டவிரோத வியாபாரத்துக்கு வழியேற்படுத்தும் வகையில் பொலநறுவை மண்ணம்பிட்டியாவிலிருந்து யக்குரே வரை வீதி அமைக்க அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் 'பசுமை' குடிமக்கள் சுற்றுச்சூழல் அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

யக்குரேவிலிருந்து மகுல்தமன வரை இரண்டரை கிலோமீற்றர் நீளமான வீதியை அமைப்பது போதுமானது எனவும், அங்கிருந்து பொலநறுவை வரை பயணிப்பதற்கான வீதி வசதி காணப்படுகின்றது என்றும் பசுமை குடிமக்கள் சுற்றுச்சூழல் அமைப்பின் அமைப்பாளர் காஞ்சன வெவெல்பனாவ வலியுறுத்தியுள்ளார்.

மணல் கடத்தல்காரர்களின் நலனுக்காக, புலத்திசிபுர காடுகளை அழிக்கும் நோக்கத்தில், மண்ணம்பிட்டியவிலிருந்து யக்குரே வரை சுமார் 20 25 கிலோமீற்றர் நீள வீதியை அமைப்பதற்கான பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அபிவிருத்தி என்ற பெயரில் புலத்திசிபுர காடுகள் அழிக்கப்படுதல், மேற்கொள்ளப்படும் வீதி அமைப்புப் பணிகள் மற்றும் பிற அழிவுள்ள என்பவற்றை நிறுத்துமாறு அவர் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.



2011 முதல் 2050 வரை செயற்படுத்தப்பட்டுவரும் தேசிய இயற்பியல் திட்டத்தின் கீழ் வரும் சுற்றுலாத் திட்டங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த வீதி அபிவிருத்தி செய்யப்படும் என்று மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டம் குறித்த ஆய்வறிக்கையில் இயற்கை ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது பற்றி ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது (த-இ)




# முரசுமோட்டையில் மரக்கன்று நடுகை



முல்லைத்தீவு, டிசெ. 7

கிளிநொச்சி முரசுமோட்டையில், கடும் மழைக்கு மத்தியிலும் மரக்கன்றுகள் நடுகை நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் விவசாய ஆராய்ச்சி மேலதிக பணிப்பாளர்
கலாநிதி அரசகேசரி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன், மற்றும் விதை நெல் ஆராய்ச்சி பிரதிப் பணிப்பாளர் சிவநேசன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு தேக்கு மரங்களை நட்டனர்.

நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர்கள், கமக்கார அமைப்பினர், கிளி. நகர றோட்டறிக் கழகத்தினர், கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவை உறுப்பினர்களின் அனுசரணையில் இது நடைபெற்றது.

(து-222)

# சிறுவர் பாடல் தொகுதி வெளியீட்டு விழா!

கொடிகாமம், டிசெ.6

கவிஞர் நந்தினியின் பாவிசை சிறுவர் பாடல் தொகுதி வெளியீட்டு விழா நேற்று முந்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

ஓய்வு நிலை அதிபரும், பண்டிதர் சரவணமுத்து நூலகம் உசன் சனசமூக நிலையத் தலைவருமான பொ.கனகரட்ணம் தலைமையில் இந்த வெளியீட்டு விழா இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு முதற் பிரதியை வழங்கினார்.

இதன்போது கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் மாணவர்கள் அனைவருக்கும் புத்தகப் பிரதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அத்துடன் உசன் இராமநாதன் வித்தியாலயம், எழுதுமட்டுவாழ் சிறீகணேசா மற்றும் மிருசுவில் றோ.க த.க பாடசாலை மாணவர்களுக்கும் ஒரு தொகுதி புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

(ம-159)

# காற்றாலை மின் நிலையம் மன்னாரில் நாளை திறப்பு

மன்னார், டிசெ.7

மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கையின் விசாலமான காற்றாலை மின் நிலையம் நாளை திறக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின்பால் இலங்கை கவனம் செலுத்தியிருப்பது வெற்றியடைந்துள்ளது. காற்றாலை மின் உற்பத்தியானது சுற்றாடல் நேயமிக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

(வஜி)

**FACULTY OF SCIENCE
UNIVERSITY OF JAFFNA**

**Registration for General/Honours Degree Examinations in Science (First Semester) - 2019**

All the students of the Faculty of Science are requested to register for the above examination on or before 21.12.2020 by filling online form at the faculty website http://www.sci.jfn.ac.lk/. The examination timetable will be made available at the faculty website one month before thecommencement of the End of Course Examinations.

04/12/2020 Registrar






## 75 குடும்பங்களுக்கு இடர் உதவி வழங்கல்



பூநகரி, டிசெ.7
பூநகரி- வலைப்பாடு பகுதியில் வெள்ளப் பாதிப்பை எதிர்கொண்டுள்ள 75 குடும்பங்களுக்கான உணவுப் பொருள்கள் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர் ஜீவராசா தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன. (வ-113)

மீண்டிடும் நினைவுகள்

28 ஆம் ஆண்டு 16 ஆம் ஆண்டு



அமரர் நமசிவாயம் நடராசா
பிறப்பு 16.04.1922 இறப்பு 11.01.1992




திருமதி நடராசா பொன்னம்மா
பிறப்பு 30.12.1922 இறப்பு 10.11.2004

ஆண்டுகள் ஓடின.... உறவுகள் ஓடவில்லை.....
மாண்டவர் மீண்டதில்லை....மானிடர் நியதியது....
மீண்டிடும் நினைவுகள்.... மீட்டிடும் உணர்வுகள்....
வேண்டிடுவோம் இறைவனையே.... ஆத்மா சாந்தியுறவே

இல.20 A, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

மகன், மகள், பேரமகன், மருமகள், பேரர், குடும்பத்தினர்.

31 ஆம் நாள் விண்ணக வாழ்வில்



மண்ணில் 27.11.1933
விண்ணில் 07.11.2020

அமரர்
### அந்தோனி யேசுதாசன்

தன்னலமற்ற பொதுப்பணிப்பணியாளனாய்
பாரினில் பல பணியாற்றிப் பெருமை சேர்த்தீர்
யேசையா! தலைவா என்று அனைவரும்
உம்மை அன்போடு அழைத்து மகிழ்ந்திருந்தனர்
அத்தனை உறவுகளையும் பிரிந்து சென்றீர் ஐயா
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வம் நீர்
நாட்கள் 31 கடந்து சென்றாலும்
உம் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாதையா
விழிநீருடன் விடை தருகின்றோம்
உம் ஆன்மா நித்திய சாந்தியைப் பெற

பிரிவால் துயருறும்
மனைவி,
மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

புரேவி பாதிப்புகளில் இருந்து

# மக்கள் இயல்பு நிலைக்கு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் தெரிவிப்பு

மன்னார், டிசெ.7
மன்னார் மாவட்டத்தில் புரேவி புயலால் பாதிக்கப்பட்ட மக்கள், மீனவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மன்னார் மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்ரின் சொய்சா தெரிவித்தார்.
மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
கடந்த 3 ஆம் திகதி தாக்கிய புரேவிப் புயலால் மன்னார் மாவட்டம் முற்று முழுதாக அழிவடைந்துள்ளது. இந்த நிலையில் மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.



இது தொடர்பில் நாங்கள் கடற்தொழில் திணைக்களத்தின் ஊடாகவும், மாவட்ட கடற்தொழில் சம்மேளனம் ஊடாகவும் கடற்தொழில் அமைச்சுக்கும், கடற்தொழில் திணைக்களத்துக்கும் கோரிக்கையை முன் வைத்துள்ளோம்.
இதில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு கடற்தொழில் அமைச்சர், கடற்தொழில் திணைக்களங்கள் உரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.
புயலால் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 291 குடும்பங்கள் இடம் பெயர்ந்து தங்களுடைய வாழ்வாதாரத்தைத் தொடர முடியாத இக் கட்டான சூழ் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.
மேலும் மன்னார் மாவட்ட மீனவர்களின் 59 டோலர் படகுகள் முற்று முழுதாக சேதமடைந்துள்ளன.
315 சிறிய படகுகள் பகுதி அளவிலும், முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேலும் மீனவர்களால் கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த ஆயிரத்து 215 வலைத் தொகுதிகள் மற்றும் 103 வள்ளங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.
மீனவர்களின் 154 மீன் வாடிகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.
மேலும் படகுகளையும், மீன் பிடி உபகரணங்களையும் பாதுகாக்கும் 154 பந்தல்கள் முற்று முழுதாக அழிவடைந்துள்ளன.112 மீனவ படகுகளின் வெளி இணைப்பு இயந்திரங்கள் கடலில் விழுந்து பாதிப்படைந்துள்ளன - என்றார். (ர-56)

### மரண அறிவித்தல்

**திருமதி நல்லம்மா செல்லத்துரை**

பயிரிக்கூடல் காரைநகரை பிறப்பிடமாகவும் 229, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா செல்லத்துரை நேற்று (06.12.2020) ஞாயிற்றுக் கிழமை சிவபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜபூபதி மற்றும் இராசமலர் (கனடா), ஞானவல்லி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாசிஜோன்மணி, கதிர்காமநாதன் ஆகியோரின் ஆசை மாமியும், அபிநயன்., அபிராமி ஆகியோரின் அருமை அம்மம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2020) திங்கட்கிழமை காலை 229, பிறவுண் வீதியில் அமைந்த அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

### மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 01 . 1948



இறப்பு 05 . 12 . 2020

**திருமதி பூபாலசிங்கம் யோகேஸ்வரி**

நாவலர் வீதி ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபாலசிங்கம் யோகேஸ்வரி, நேற்று முன்தினம் (05.12.2020) அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சட்டநாதர் பரமேஸ்வரி தம்பதியின் அருமை மகளும், காலம்சென்ற முத்துக்குமாரு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், பூபாலசிங்கம் (ஓய்வு பெற்ற இ.போ.ச ஊழியர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், ஆனந்தேஸ்வரி, மற்றும் செந்தில்நாதன், தனேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரநாதன் ஆகியோரின் சகோதரியும், பிரணவன், கிருபாலினி (அம்பிகா) ஆகியோரின் தாயாரும், கிருஸ்ணகுமார், வானதி ஆகியோரின் மாமியாரும் தனுசாந், சுபாங்கி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.12.2020) திங்கட்கிழமை மதியம் 11:30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

310, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தகவல் :
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

## மூன்று பகுதிகள் லொக்டவுண்

கொழும்பு, டிசெ.7
கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தை கோகிலா வீதி உட்பட மூன்று இடங்கள் இன்று காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்படவுள்ளன.
கொம்பனித்தெருவில் உள்ள ஹூனுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, கருவாத்தோட்டத்தில் 60ஆம் தோட்டம், வெள்ளவத்தையில் கோகிலா வீதி என்பன இவ்வாறு தனிமைப்படுத்தப்படவுள்ளன. இதேவேளை, இன்று காலை 5 மணி முதல் கொழும்பு மாவட்டத்தின் புளூமெண்டல் பொலிஸ் பிரிவு மற்றும் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் விஜயபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன .(எ-22)

## இருபதாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சிதம்பரப்பிள்ளை செல்வரெட்ணம்**

**திதி: ஸப்தமி**

ஆண்டு இருபது ஆனாலும் உங்கள் நினைவு
எங்கள் இதயத்தை விட்டு மறையாது
நீங்கள் இல்லாமல் எங்கள் வாழ்வு நீர்க்குமிழி
- ஆனதையா
நாள்தோறும் கண்ணீரில் முழ்கின்றோம்
அனு தினமும் தங்களின்
நினைவுடன் அலை மோதி நிற்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய வணங்குகின்றோம்**

சீவனாய் 11.11.1949 — சிவமாய் 17.11.2000

பிரிவால்துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமகள்,
மச்சான், குடும்பத்தினர்.
20 A, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,

## முப்பத்து மூன்றாவது ஆண்டு நினைவலைகள்



அமரர்

**வே. த. தனிகாசலம் குருமாமணி**

(முன்னாள் அதிபர்-
யா/அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை)


| ஜனனம் | மரணம் |
|---|---|
| 12 - 09 - 1928 | 07 - 12 - 1987 |

ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் ஆண்டுகளாயினும்
ஒன்றித்து நாம் வாழ்ந்த காலங்கள் நேற்றைய நிகழ்வு போல்
நன்றாகும் நம் வாழ்வில் தங்களின் வழிகாட்டல்கள்
நாமிதை உணர்கிறோம் நற்பெயர் பெற்றுமே.
அன்போடு உறவுகள், ஊரவர்கள், ஆலயங்கள், பாடசாலைகள்
- என்று பல சேவைகள் செய்திட்ட குருமாமணியே
எந்நாளும் எவராலும் மறக்கலாமோ கல்வியில்
- ஏணியாய் இருந்த தங்கள் வதனமதை...

"இராஸ்தலம்"
அல்வாய்
0763656508

என்றும் தங்களைநினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 20 . 04 . 1957 | 07 . 11 . 2020 |

குப்பிழானைப் பிறப்பிடமாகவும் ஒட்டுசுட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட

**கனகரத்தினம் மனோகரன்**

**திதி: அபரபக்க சப்தமி (07.12.2020)**

கனகரத்தினம் வைத்தியரின் கரம்பற்றிய சிவபாக்கியம் வாத்தியாரின் சீரிய புத்திரனே சிங்கப் பூர்ச் சீமையின் பெஞ்சனியர் வைத்தியலிங்கத்துக்கும் சிவகங்கை அம்மாவுக்கும் தெய்வானை அம்மாவின் கரம் பிடித்த சுப்பையா அம்மாவுக்கும் பேரனாக அவதரித்தவரே.
எம்மைப் பாதி வழியில் பரிதவிக்க விட்டுவிட்டு எங்கே ஐயா சென்றீர்கள்? அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானியான உரித்தான தாய்மாமன் துரைச்சாமி மலர்ச்சித்தி உற்ற துணையான அண்ணன் கருணாகரன் தங்கைகளான சிவாஜினி, சிவஞானப்பிரகாசினி இவர்களைப் பார்க்கச் சென்றீரோ? தரணி போற்றும் தம்பியையா வாத்தியாரும் தங்கம்மா மாமியும் அன்புடனே பெற்றெடுத்த அன்பு மலரைக் கரம் பிடித்தவரே!
பொறியியல்துறை வல்லுனரான நீங்கள் பொறியியலாளராக உங்கள் ஒரே மகன் ஞானகலா கரனையும் மருமகளாக பிரியதர்சினியையும் ஸ்வத்தியரின் மகனான நீங்கள் வைத்திய நிபுணராக மூத்த மகள் மனோஜாவையும் மருமகனாக வைத்தியநிபுணர் அரசகுமாரையும் கணித பாடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் முதலாம் பிள்ளையாகத் தடம்பதித்த நீங்கள் கணக்கி யலில் பட்டம் பெற்ற மகளாக வனஜாவையும் மருமகனாக கஜேந்திரனையும் பெற்றெடுத்துப் பெருமை கொண்டீர். இவர்கள் இடப்பெயர்வு காரணமாக இந்தியாவிலும் லண்டனிலும் வாழும் நிலையறியச் சென்றீரோ. உங்களை இடை நடுவில் விட்டுச் சென்ற உங்கள் அன்புத் தம்பி ஞான கலாதரனின் பெயர் விளங்க ஒட்டு சுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயச் சூழலில் அமைத்த உங்கள் அரிசி ஆலைக்கு ஞானகலா அரிசி ஆலை எனப்பெயரிட்டு வளமுடனனே வாழ்ந்தீர்கள். முத்தையன் கட்டுப் பிரதே சத்திலும் அதன் அயற் கிராமங்களிலும் வாழும் ஏழை விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடனுதவி செய்திடுவீர். வட்டி என்பது உங்களுக்குப் பிடிக்காத ஒன்று. இதனால் பதுளையிலும் திருகோண மலையிலும் இருந்த உங்கள் வட்டிக்கடைகளை மூடிவிட்ட உத்தமரே.
குப்பிழானின் காவல் தெய்வம் கற்கரைக் கற்பக விநாயகருக்குத் தங்கள் காணியில் ஆலயம் அமைத்துப் பரிபாலமை செய்துவந்த உயர் குடியில் பிறந்தவரே! கோயிலுக்குத் தொண்டு செய்யும் இளைஞர் விளையாட மைதானம் அமைக்கக் காணி வாங்கிக் கொடுத்தீர்கள் கோயிலைச் சுற்றி யிருந்த உங்களுக்கு உரித்தான காணிகளை தொண்டர்களுச் சகாய விலையில் கொடுத்த சீலரே. அன்பு, இரக்கம் ஈகை என்னும் உயர் குணங்கள் கொண்டு அரச வீட்டுத் திட்டங்களில் வீடுபெறக் காணிகள் இல்லாத உங்கள் இரத்த உறவினர்களுக்கு இலவசமாகக் காணிகள் வழங்கிய குணக் குன்றே. எங்களை விட்டுச் செல்ல எப்படி ஐயா மனம் வந்தது? கற்கரைப்பிள்ளையாருக்குத் தவறாமல் வருடந்தோறும் கொடிச் சீலை சுமந்து வந்த தோள்கள் துவண்டனவோ? கற்கரை யானின் தேர்த்திருவிழா உபயகாரனாகி பிடித்து இழுத்த கைகள் சோர்ந்தனவோ?
கோயில் வீதிகளைச் சுற்றிப்பார்வையிட்ட கால்கள் செயலிழந்தனவோ? என்னய்யா நடந்தது உங்களுக்கு உற்றார், உறவினர், நண்பர்கள், வெளிநாடு சென்றிடவோ, உள்நாட்டில் தொழில்கள் செய்திடவோ விளம்பரம் இல்லாமல் உதவிகள் செய்திடுவீர். அவர்கள் உங்கள் உதவி இனிக் கிடையாதென்று ஏங்கிக் கண்ணீர் வடிக்கிறார்கள். உங்கள் ஆன்மா சாந்தியடைய பஜனைகளும் திருமுறைகள் ஓதுதலும் செய் கிறார்க்ள. எங்கள் துயர்துடைக்க எழுந்தோடி வாருமய்யா. தனி வாழ்விலும் தொழில் ரீதியிலும் பொது வாழ்விலும் யாரும் குறைகாணா தப்பி வாழ்ந்தீர்களே! அதுவென்றே உங்கள் ஆன்மா சாந்தி அடையப் போதுமையா!

ஞானகலா மில்லடி,
ஒட்டுசுட்டான்.

இ.தெய்வேந்திரம்
குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டின் நிறைவினிலே...



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 . 01 . 1941 | 05 . 12 . 2012 |

**அமரர் சின்னப்பா குணரத்தினம்**

(ஓய்வுநிலை உப தபால் அதிபர் -
கனகராயன்குளம்)

**திதி . அபரபக்க ஸப்தமி (07.12.2020)**

*அப்பா!*
சட்டென்று கடந்ததுவோ
எட்டாண்டுகள் - நீங்கள்
ஊட்டிய அறிவும், காட்டிய நற்பண்புகளும்
என்றும் எம்மை வழிநடத்தும் .....

இல. 695/2, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்
(ஸ்ரேசன் றோட், பளை)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 07.11.2020 அன்று
சிவபதமடைந்த

**அமரர் கமலாதேவி சிவபாததுரை**

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 09 . 1948 | 07 . 11 . 2020 |

**திதி: அபரபக்க ஸப்தமி**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும், மின்னஞ்சல், தொலைபேசி, சமூக ஊடகங்கள் வாயிலாக வும் அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு வகைகளிலும் இறுதி நிகழ்வில் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.


தற்போது நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை மற்றும் நடைமுறைகள் காரணமாக அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு தங்களை அழைக்க இயலாமைக்கு மிகவும் மனம்வருந்துகின்றோம்.

அரசடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

வசிப்பிடத்தை உறுதிப்படுத்தினால் கொடுப்பனவு இடம்பெயர்ந்துள்ள குடும்பங்கள் தாங்கள் தற்போது குடியிருக்கும் இடங்களை ஆதாரப்படுத்தும் பட்சத்தில் கொரோனா கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என மன்னார் மாவட்ட சமுர்த்தி பணிப்பா ளர் தெரிவித்துள் ளார். கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்டோருக்கான நிதி உதவி இடம்பெ யர்ந்து வாழும் குடும்பங்கள் சிலவற் றுக்கு கிடைக்க வில்லை எனும் முறைப்பாடு தொடர்பில் பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது. எங்களுக்கு கிடைக்கப்பெற்ற விபரத்தி ன்படி மன்னார் மாவட்டத் தைச் சேர்ந்த சுமார் 2500 குடும்பங்கள் வெளி மாவட்டங்க ளில் வசிக்கின்றனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்களில் இதுவ ரைக்கும் 1265 குடும்பங்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஏனையோர் மன்னார் மாவட்டத் தில் இருப்பதை உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அவர்க ளுக்கு கொடுப்பனவு கள் வழங்கப்படும் என்றார். (வ-60)

உதயன் newuthayan.com



## 18 சுரங்கத் தொழிலாளர்கள் விஷவாயு கசிவால் மரணம்

பீஜிங், டிசெ.7
சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நிலக்கரிச் சுரக்கம் ஒன்றில் ஏற்பட்ட விஷவாயு கசிவால் 18 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.
தனியாருக்கு சொந்தமான நிலக்கரி சுரங்கத்தில் வழமைபோன்று 20 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது சுரங் கத்துக்குள் கார்பன் மோனொக் ட் வாயு அளவுக்கு அதிகமாக வெளியேறியது. அதனை சுவாசித்ததால் ஏற்பட்ட கடுமையான மூச்சுத் திணறலால் தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 5 தொழிலாளர்கள் மயங்கிய நிலையில் உயிருடன் மீட்கப்பட்டனர். (வ-இ)

# பெருந்தொற்றின் முடிவை உலகம் கண்முன் காணும்

### டெட்ரோஸ் அதனோம் நம்பிக்கை


**நியூயோர்க், டிசெ.7**
**கொரோனாத் தொற்று முடிவுக்கு வருவதை எம் கண்முன்னே காண முடியும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் இணையவழியூடாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
கொரோனா வைரஸ் தடுப்பூசி சோதனைகளின் முடிவுகள் நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளன. கொரோனா தடுப்பூசி விநியோகம் ஏழைகளையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும் சென்றடைவதை பணக்கார மற்றும் சக்தி வாய்ந்த நாடுகள் மிதித்துவிடக்கூடாது. கொரோனா வைரஸ் பெருந்தொற்று அதன் மிகச்சிறந்த மற்றும் மிக மோசமான பக்கத்தை மனித குலத்துக்கு காண்பித்துள்ளது. இரக்கம், சுயதியாகத்தின் ஊக்கம் அளிக்கும் செயல்கள், விஞ்ஞானம் மற்றும் புதுமையின் மூச்சடைக்கக்கூடிய சாதனைகள் மற்றும் ஒற்றுமை என்பவற்றின் அவசியத்தையும் இது காண்பித்துள்ளது- என்றார். (வ-இ)

## பெற்றோல் வாகனங்களுக்கு தடைவிதிக்கவுள்ள ஜப்பான்

டோக்கியோ, டிசெ.7
ஜப்பான் அரசாங்கம் 2030ஆம் ஆண்டுக்குள் பெற்றோலில் இயங்கும் வாகனங்களின் விற்பனைக்குத் தடை விதிக்கத் திட்டமிட்டுள்ளது என என்.எச்.கே செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.
ஜப்பானில் 2050ஆம் ஆண்டுக்குள் கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் நீக்கப் பிரதமர் யோஷிஹிடே சுகா சபதம் எடுத்துள்ளார். அதற்கான திட்டத்தை ஜப்பான் தொழில்துறை அமைச்சர் ஆண்டிறுதிக்குள் தயார் செய்வார் என கடந்த வெள்ளிக்கிழமை நடந்த செய்திக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.
ஜப்பானில் உள்ள அனைத்துப் புதிய வாகனங்களும் மின்சாரத்தில் இயங்குபவையாக இருப்பதை உறுதிசெய்ய தொழில்துறை அமைச்சு முனைகிறது. அடுத்த சில ஆண்டுகளில் வெளியாகும் அரசாங்கக் கொள்கைகள், முதலீடுகள் ஆகியவை கரியமில வாயு வெளியேற்றத்தைச் சமநிலைப்படுத்த வழிவகுக்கும் என பருவநிலை ஆர்வலர்களும் எரிசக்தி மாற்ற நிபுணர்களும் நம்புகின்றனர். (வ-இ)




## மக்கள் முன்னிலையில் கொரோனாத் தடுப்பூசி

நியூயோர்க், டிசெ.7
அமெரிக்காவில் தடுப்பு மருந்தின் பாதுகாப்புக் குறித்து பொதுமக்களுக்கு நம்பிக்கையளிக்கும் விதமாக பொதுமக்கள் முன்னிலையில் தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு ஜோ பைடன் திட்டமிட்டுள்ளார்.
முன்னாள் ஜனாதிபதிகளான பராக் ஒபாமா, ஜோர்ஜ் புஷ், பில் கிளிண்டன் ஆகியோரும் பொதுமக்கள் முன்னிலையில் தடுப்பூசி போட்டுக்கொள்ள முன்வந்துள்ளனர்.
அத்துடன், தாம் பதவியேற்ற முதல் 100 நாள்களுக்கு முகக்கவசம் அணியும்படி மக்களை கேட்கப் போகிறேன் எனவும் அரச நிறுவனங்களில் அனைவரும் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்று உத்தரவிடப்படவுள்ளது எனவும் பைடன் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (வ-இ)

## 15 லட்சத்தைக் கடந்தது கொரோனா உயிரிழப்பு

### ஒன்பது வினாடிக்கு ஓர் உயிர் பலி

லண்டன், டிசெ.7
உலகெங்கும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 லட்சத்தைக் கடந்துள்ளது. வாராந்தம் சராசரி எண்ணிக்கையாக ஒன்பது வினாடிக்கு ஓர் உயிரிழப்பு பதிவாகியுள்ளது.
ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின்படி, நேற்றுக் காலை நிலவரப்படி, உலகளவில் 15 லட்சத்து 28 ஆயிரத்து 312 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். 6 கோடி 64 லட்சத்து 85 ஆயிரத்து 651 பேர் கொரோனாத் தொற்று பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். உலகில் 191 நாடுகளில் கொரோனா பரவியுள்ளது.
கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2019 இல் காசநோயால் உயிரிழந்தவர்களை விடவும் அதிகம் என்பதோடு, மலேரியாவால் ஏற்படும் உயிரிழப்புகளை விடவும் சுமார் நான்கு மடங்கு அதிகம் என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இதேவேளை அபிவிருத்தி அடைந்த ஒருசில நாடுகளுக்கு தடுப்பு மருந்துகள் இந்த மாதத்தில் கிடைக்கப்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



### ட்ரம்புக்கு பலத்த அடி

# நான்கு மாநில வழக்குகள் ஒரே நாளில் தள்ளுபடி

வொஷிங்டன், டிசெ.7
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மோசடி நடந்துள்ளது எனக்கூறி ட்ரம்ப் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட நான்கு வழக்குகள், ஒரே நாளில் 4 மாநிலங்களில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.
அமெரிக்காவில் கடந்த மாதம் 3ஆம் திகதி நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றி பெற்றார்.
ஆனால் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் தனது தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்துள்ளார்.
இந்த நிலையில் ஜோர்ஜியா, மிச்சிகன் நெவாடா மற்றும் விஸ்கொன்சின் ஆகிய 4 மாநிலங்களில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரே நாளில் தேர்தல் முறைகேடு தொடர்பாக ட்ரம்ப் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்தன.
தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளன எனக் குற்றச்சாட்டை நிரூபிக்க எந்தவொரு ஆதாரங்களும் இல்லாமல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனக் கூறி நீதிபதிகள் வழக்குகளை தள்ளுபடி செய்தனர். (வ-இ)

## கிளிநொச்சி...

பணியாற்றிய முதியவருக்கு, இருவாரங்களுக்கு முன்னர் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து அந்தக் கடைக்கு அருகிலிருந்த குடிதண்ணீர் விநியோக நிலையம் மற்றும் மலர்ச்சாலையில் பணியாற்றியவர்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

குடிதண்ணீர் விநியோக நிலையத்தி லிருந்த மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களோடு தொடர்பிலிருந்த பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிசெய்யப்படாத நிலையில் முதலாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்டு 11ஆவது நாள் பெறப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போதே மலர்ச்சாலை இளைஞனுக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ-214)

## 649...

இவர்களில் 20 ஆயிரத்து 460 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 280 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 137 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## பருத்தித்துறையில்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நீரிழிவு நேயாளியான அவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

அவரது வீட்டில் மகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர். மருத்துவபீட இறுதியாண்டு மாணவியான அவர் கொழும்பில் தங்கியிருந்து கல்வி கற்றவர். அண்மையில் வீடு திரும்பியிருந்தார். அவர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இரண்டு முறை பி.சி.ஆர். சோதனைக்கு உள்ளாக்கப்பட்டார். இரண்டு முறையும் கொரோனாத் தொற்றில்லை என்ற முடிவு வந்திருந்தது.

அவரது தந்தை உயிரிழந்ததையடுத்து, நேற்றுக் காலை அவரது மாதிரிகளை பி.சி.ஆர். பரிசோதனைக்காக பருத்தித்துறை மருத்துவமனை நிர்வாகம் அனுப்பியிருந்தது. பரிசோதனை முடிவுகளின்படி அவருக்கு தொற்று இல்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,இ)

## போகம்பரை...

சிறைச்சாலைகளுக்குச் சொந்தமான பஸ்களில் அழைத்து வரப்பட்ட கைதிகள் அனைவரும் கொரோனா நோயாளர்களுடன் இருந்த சந்தேகத்தின் அடிப்படையில் தனிமைப்படுத்தலுக்காக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அழைத்துவரப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்படவில்லை. (ஒ,5)

## முன்னுள்ள...

ளின் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளிலும், தனிமைப்படுத்தல் என்பதைத் தாண்டி குறுகிய காலத்துக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளதாவது ஆரம்பத்தில் அபாயமற்ற பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் கூட தற்போது கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கிழக்கில் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று, புத்தளத்தில் சில பகுதிகள், இரத்தினபுரி, மத்திய மாகாணத்தில் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

முழு நாட்டிலுமுள்ள மொத்தத் தொற்றாளர்களில் 30 வீதத்துக்கு அதிகமானோர் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளனர். இதிலிருந்து இங்கு பெரும் அவதானம் காணப்படுகிறது என்பது தெளிவாகின்றது.

கொழும்பில் காணப்படுகின்ற அபாயத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, புதிதாக பண்டாரகம - அட்டுலுகம பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பரவலைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே தொற்றாளர்கள் தொடர்பில் பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச மருத்துவ அதிகாரிகளுக்கு முறையான தீர்மானங்களை எடுக்கமுடியும். அவ்வாறில்லை என்றால் பரவல் எந்தளவுக்குத் தீவிரமடையும் எனக் கூற முடியாதுஎன்றார். (எ-22)

## கொட்டுகின்றது...

நிவர் புயலுடன் வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்த மழை வீழ்ச்சி, புரேவி புயலுடன் தீவிரமடைந்தது. கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி வரையில் நிவர் புயலுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு இந்த ஆண்டு கிடைக்க வேண்டியிருந்த மழை வீழ்ச்சியின் 46 சதவீதமே கிடைத்திருந்திருந்தது. நிவர் மற்றும் புரேவி புயல்களால் கன மழை கிடைத்ததை அடுத்து யாழ்ப்பாணத்துக்கு இந்த ஆண்டுக்கான சராசரி மழை வீழ்ச்சி கிடைத்திருந்தது. நிவார் புயல் கடந்த பின்னரும் கனமழை தொடர்வதால் யாழ்ப்பாணம் உட்பட பல இடங்களில் தற்போது வெள்ள நீர் தேங்கத் தொடங்கியுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

"வடக்கை ஊடறுத்துச் சென்ற புரேவி புயல் மன்னார் வளைகுடாவில் அழிவடையத் ஆரம்பித்திருக்கின்றது. ஆனால் கிழக்கு அலைகளின் உள்வருகையால் அடுத்த மூன்று தினங்களுக்கு வடக்கு மாகாணம் முழுவதும் பரவலாகக் கன மழை அல்லது மிதமான மழை இடையிடையே கிடைக்கும்" என்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

புரேவி புயல் வடக்கு மாகாணத்தை ஊடறுத்துச் சென்று மன்னார் வளைகுடாவில் தற்போது தாழமுக்கமாக வலுக்குறைந்த நிலையில் உள்ளது. அது பலமணி நேரமாக ஓரிடத்திலேயே நிலை கொண்டுள்ளது.

"ஒடுங்கிய நிலப்பரப்பில் புரேவி புயல் தாழமுக்கமாக நிலைகொண்டுள்ளதால் நகர முடியாது உள்ளது. தற்போது அது அழிவடைய ஆரம்பித்திருக்கின்றது. எனினும் எதிர்வரும் புதன்கிழமை வரை வடக்கில் மழை தொடரும்" என்றும் விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆண்டின் சராசரி மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக மழை வீழ்ச்சி காணப்பட்டால் வெள்ள அபாயம் ஏற்படும் நிலை காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் நகரப் பகுதி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் நகரப் புறநகர் பகுதிகளில் தற்போது வெள்ளம் தேங்கியுள்ளது. இவற்றை விடவும் வடக்கின் பல இடங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. அதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

புரேவி புயலால் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்திருந்தனர். ஆயினும் மழை தொடர்வதால் அவர்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## கொரோனா...

ந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

71, 80, 98 வயதுகளையுடைய மூன்று ஆண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் 127 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## வெள்ள....

கள் முயற்சிகளை எடுத்தும், பொதுமக்கள் ஒத்துழைப்பு இன்மையாலும், பொதுமக்களின் சமூக அக்கறையற்ற செயற்பாடுகள் காரணமாகவும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள இடர் நிலைமை தொடர்பில் ஆராயும் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கழிவுப் பொருள்களை வீசுதல், வடிகான்களை மூடுதல் அல்லது தேவையற்ற பொருள்களை பொது இடங்களில் வீசுதல் போன்ற செயற்பாடுகளாலும் வெள்ள நீர் ஓடாமல் தேங்குகின்றது.

இயற்கையாக வெள்ள நீர் வழிந்தோடக் கூடிய வடிகால்களை பாதுகாக்கவேண்டும். வீதி அபிவிருத்தி பணிகளின் போது அதைக் கவனத்தில் எடுக்கவேண்டும்.

புயல் காரணமாக ஏற்பட்ட சேத விவரங்களை மதிப்பீடு செய்து துரித மதிப்பீட்டறிக்கையை தயாரிக்குமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவித்திருக்கின்றோம்.

எதிர்காலத்தில் உடனடியாக சீர் செய்ய வேண்டியவற்றை உடனடியாகவும் ஏனையவற்றை அதனை உரியவாறு செயற்படுத்துவதற்கு உரிய தகவலைப் பெற்று அதனை செயற்படுத்துவதற்கும் உள்ளோம்-என்றார். (ஒ-111)

## திட்டமிடல்...

இல்லாத அபிவிருத்திப் பணிகளே காரணம் என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

தற்போது வடக்கில் கன மழை பெய்து வரும் நிலையில், வடக்கின் பல இடங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் நகர் பகுதியிலும், அதை அண்டிய பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் சரியான திட்டமிடல் இல்லமையே இந்த வெள்ள இடருக்குக் காரணம் என்று சமூக ஆர்வலர்கள் பலரால் சுட்டிக்காட்டப்படுகின்றது. வீதி அபிவிருத்தியின்போது, நில மட்டத்தை விட உயரமாகவே வீதிகள் அமைக்கப்படுகின்றன. அதனால் வீதியின் ஒரு ஒரு புறத்தில் இருந்து மறுபுறத்துக்கு வெள்ள நீர் செல்வது தடைப்பட்டுள்ளது. பல வீதிகளில் வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளபோதும், அதன்போது வடிகால் அமைப்புத் தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதனால் நீரோடும் பாதைகள் தடைப்பட்டு வெள்ளம் தேங்க ஆரம்பித்துள்ளது என்று சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேநேரம் ரயில் பாதைகளும் அவ்வாறே நில மட்டத்தில் இருந்து உயரமாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றாலும் நீரோட்டம் தடைப்படுகின்றது. அதனால் வெள்ளநீர் குடியிருப்புகளு க்குள் தேங்கும் நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சட்டவிரோத கட்டுமானங்களாலும் நீரோட்டப் பாதைகள் தடைப்பட்டுள்ள அதேநேரம், யாழ்ப்பாணத்தில் உள்ள குளங்கள் நீண்டகாலமாகத் தூர்வா ரப்படாதுள்ளமையும் இந்த வெள்ள இடருக்குக் காரணம் என்று சமூக ஆர்வலர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் நகரப் பகுதியிலும், அதை அண்டிய பகுதிகளிலும் உள்ள குளங்கள் பல ஆண்டுகளாகத் தூர்வாராத நிலையில் உள்ளன. அதைவிடவும் சில குளங்கள் திட்டமிட்டுத் தூர்க்கப்பட்டுள்ளன. இவையும் வெள்ள இடருக்குக் காரணமாக உள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

## யாழில்..

கம் பிற்பகல் 5.30 மணி வரையான காலப்பகுதியில் திருநெல்வேலியில் 80.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது என்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ந.பிரதீபன் தெரிவித்தார். (எ)

## வெள்ளம்...


தற்போது பெய்துவரும் கன மழையால் வடக்கில் உள்ள நீர் நிலைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. வவுனியா, புதுக்குளத்தில் உள்ள நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமும் உயர்ந்ததை அடுத்து, சுருங்கை ஊடாக நீர் திறந்து விடப்ப ட்டிருந்தது.

நீர் வெளியேறுவதை வேடிக்கை பார்ப்பதற்கு நண்பர்களுடன் சென்ற 18 வயது மாணவனே வெள்ள நீரில் அடித்துச் செல்லபட்டிருந்தார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது. பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரியில் கற்கும் தி.தனுசன் (வயது-18) என்ற மாணவனே காணாமல் போயிருந்தார். வெள்ளநீர் ஓடும் வாய்க்காலில் இறங்க முற்பட்டபோது அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரைத் தேடும் நடவடிக்கையில் பொதுமக்கள், இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலர் ஈடுபட்டனர். எனினும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நேற்றுக் காலை மாணவனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. மாணவன் மூழ்கிய இடத்தில் இருந்து 50 மீற்றர் தொலைவில் மாணவனின் சடலம் நீரில் மிதந்துள்ளது.

மாணவனின் சடலம் மீட்கப்பட்டதை அடுத்து, மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.கிருசாந்தன் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி க.ஹரிப்பிரசாத் ஆகியோர் சடலத்தைப் பார்வையிட்டனர். அதன்பின்னர் உடல் கூற்றுச் சோதனைக்காக சடலம் வவுனியா மாவட்ட மருத்து வமனைக்கு அனுப்பப்பட்டது. (எ-ரி3)

# பரபரப்பான ஆட்டத்தில் இந்தியா 'திரில்' வெற்றி!



சிட்னியில் நடைபெற்ற 2ஆவது ரி-20 கிரிக்கெட் ஆட்டத்தில் கடைசிப் பந்துப் பரிமாற்றங்கள் 14 ரன்கள் தேவை என்ற நிலையில், ஹர்திக் பாண்ட்யா 2 சிக்ஸர்கள் விரட்ட இந்தியா த்ரில் வெற்றி பெற்றது. தொடரையும் 2-0 எனக் கைப் பற்றியது.

ஆஸ்திரேலியா இந்தியா இடையிலான 2ஆவது ரி-20 ஆட்டம் சிட்னியில் நேற்று நடைபெற்றது. முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 5 இலக்குகள் இழப்புக்கு 194 ஓட்டங்கள் குவித்தது.

195 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந் தியா களம் இறங்கியது. மிகப் பெரிய இலக்கு என்பதால் இந்திய அணி தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கே.எல். ராகுல் 22 பந்துகளில் 30 ஓட் டங்களும், தவான் 36 பந்துக ளில் 52 ஓட்டங்களும், விராட் கோலி 24 பந்துகளில் 40 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். சஞ்சு சாம்சன் 10 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்தார்.



கடைசி 4 பந்துப் பரிமாற்றங்களில் 46 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 17ஆவது பந் துப்பரிமாற்றத்தில் சாம்ஸ் வீசினார். இந்த பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தில் விராட் கோலி ஆட்டமிழந்தார். அடுத்து ஹர்திக் பாண்ட்யா உடன் ஷ்ரேயாஸ் அய்யர் ஜோடி சேர்ந்தார். இந்தப் பந்துப் பரிமாற்றத்தின் கடைசி பந்தில் பவுண்டரி அடித்தார் ஹர்திக் பாண்ட்யா.

கடைசி 3 பந்துப்பரிமாற்றங்களில் 37 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 18ஆவது பந்துப்பரிமாற்றத்தை அடம் ஜம்பா வீசி னார். இந்தப் பந்துப்பரிமாற்றத்தில் முதல் மூன்று பந்தில் இந்தியா 2 ஓட்டங்களே எடுத்தது. ஆனால் 4ஆவது பந்தை சிக்சருக்கு அனுப் பினார் ஷ்ரேயாஸ் அய்யர். அதோடு மட்டுமல்லாமல் கடைசி பந்தை பவுண்டரிக்கு விரட் டினார். இந்தப் பந்துப்பரிமாற்றத் தில் 12 ஓட்டங்கள் கிடைக்க கடைசி 2 பந்துப்பரிமாற் றங்களில் 25 ஓட் டங்கள் தேவைப் பட்டது.

19ஆவது பந்துப் பரிமாற்றத்தை அந்த்ரே டை வீசினார். இந்தப் பந்துப்பரிமாற்றத்தில் பாண்ட்யா இரண்டு பவுண்டரி விரட்டினாலும் 11 ஓட்டங்களே கிடைத்தன. அதனால் கடை சிப் பந்துப்பரிமாற்றத்தில் 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

சாம்ஸ் கடைசிப் பந்துப்பரிமாற்றத்தை வீசினார். முதல் பந்தில் 2 ஓட்டங்கள் அடித்த ஹர்திக் பாண்ட்யா அடுத்த பந்தை சிக்சருக்கு தூக்கினார். 3ஆவது பந்தில் ஓட்டங்கள் எதுவும் பெறாத ஹர் திக் பாண்ட்யா 4ஆவது பந்தை சிக்ச ருக்கு தூக்கி இரண்டு பந்துகள் மீதமுள்ள நிலையில் இந்திய அணியை த்ரில் வெற்றி பெற வைத்தார்.

ஹர்திக் பாண்ட்யா 22 பந்தில் 3 பவுண் டரி, 2 சிக்சருடன் 42 ஓட்டங்களும், ஷ்ரேயாஸ் அய்யர் 5 பந்தில் 12 ஓட்டங் களும் எடுத்து ஆட்மிழக்காமல் இருந்த னர். இந்த வெற்றி மூலம் இந்தியா 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என வென்றது. (எ)

**வேலையாள் தேவை**

யாழ்நகரில் உள்ள பிரபல பலசரக்கு கடையில் வேலைசெய்வதற்கு வேலையாள் தேவை. முன் அனுபவம் இருத்தல் வேண்டும் நாள் வருமானம் **1100/=**
தொடர்புகொள்ளவேண்டிய இலக்கம்
**071 064 5447**

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### யாழ்ப்பாணம்...

சீரற்ற காலநிலை தொடர்பாக கல்வி அதி காரிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரையா டலின் பின் இந்த தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

புரேவி புயல் காரணமாக கடந்த வியா ழன் மற்றும் வெள்ளிக்கிழமை வடமாகா ணம் முழுவதும் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டது. இந்த நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று திங்கட்கிழமையும் விடுமுறை நீடிக்கப்பட்டுள்ளது.

காலநிலைமையை அவதானித்து அதற்கு ஏற்ப விடுமுறையை நீடிப்பதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும் என்று கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தெரிவித்தார். (ஒ.5)

### குறைபாடுகளை....

கோரி நாளை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங் கத்தின் தெல்லிப்பழை கிளை அறிவித் துள்ளது.

குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரக் கோரி பல தடவைகள் வைத்தியசாலை நிர்வாகத்திடமும், பிராந்திய காதார சேவைகள் திணைக்களத்திடமும் கோரிக் கைகள் முன்வைக்கப்பட்ட போதும், எந்த முன்னேற்றமும் இல்லை. அதைய டுத்தே பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டது என் றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையில் பணிபுரியும் மருத் துவர்களுக்குத் தேவையான அளவு முகக் கவசங்கள், முகப் பாதுகாப்புக் கவசம், பாதுகாப்பு அங்கி என்பன இல்லை.

வெளிநோயாளர் பிரிவில் போதுமான இடவசதி இல்லை. பார்வையிடும் பகுதி, நோயாளரை அனுமதிக்கும் பகுதி எனத் தனித்தனியாகப் பிரிக்குமாறு கோரிய போதும், அது நிறைவேற்றப்படவில்லை.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச் சைப் பிரிவு ஆரம்பிக்க வேண்டிய உட னடித் தேவை உள்ளது. அதற்கு நிரந்தர மான உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளபோதும், தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலைக்குரிய உணர்வழியியல் சிகிச்சை நிபுணர் விடு விக்கப்படவில்லை.

வவுனியா கல்வி வலயப் பணிமனையில் நடந்த நிதிமுறைகேட்டைக் காரணம் காட்டி எமது வைத்தியசாலை வைத்தியர் களுக்கான மேலதிக நேரக் கொடுப்ப னவு வழங்குவதில் தேவையற்ற இழுத்த டிப்புச் செய்யப்படுகின்றது.

வெளிமாவட்ட மருத்துவர்களுக்குப் போதிய விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக் கப்படவில்லை. இதனால் சில மருத்துவர் கள்பணியில் இருந்துவிலகியுமுள்ளனர்.

யாழ்பபாணம் மாவட்ட மருத்துவமனை களின் கழிவுகள் தெல்லிப்பழை மருத்து வமனையிலேயே எரியூட்டப்படுகின்றன. ஆனால் எரியூட்டும் இயந்திரம் சரியான முறையில் இயங்கவில்லை. குறைதகன நிலையால் நோயாளர்கள், ஊழியர்கள், அருகில் வசிப்பவர்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை களைச் சரியான காலத்தில் சரியான முறையில் தீர்ப்ப தற்கு நிர்வாக த்தி னரும், சம்பந்தப் பட்டவர்களும் ஒத் துழைப்புத் தர வில்லை. அதைய டுத்து நாளை அடையாளப் பணிப் புறக்க ணிப் புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அந்தச் சங் கம் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ)

**வேலையாள் தேவை**

வீட்டில் தங்கியிருந்து நோயாளி ஒருவரைப் பராமரிப்பதற்கு 40 வயதிற்குட்பட்ட பெண் ஒருவர் தேவைப்படுகிறது. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
**தொடர்புகளுக்கு:**
**077 241 6727, 021 227 0180**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராசபாத வீதி மெயின் றோட்டுடன் மேட்டு நிலம். 6 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை.
**077 623 4204**
**077 288 0152**
(ராச வீதி சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம் மெயின் றோட்டுடன்)

**காணி தேவை**

நாவலர் வீதி, பிறவுண் வீதி, மனோகரா சந்தியினை அண்மித்த பிரதேசத்தில் A/L பிரிவிற்குரிய தனியார் கல்வி நிறுவனம் அமைப்பதற்கு உகந்த காணி வாடகைக்குத் தேவை.
தொடர்பு : Ka.Subeesan
**077 430 7829, 076 236 3470**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.